★ விலை ரூபா 1.25

# ஈழநாடு

THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

— வெள்ளி விழா ஆண்டு —

மலர் 25 மார்கழி 22 ரபி. ஆகி 2 இதழ் 325
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 6-1-84

## இடம்பெயர்ந்த தமிழ்பல்கலைக்கழகமாணவர்

# 9ம் திகதிக்குப் பின்னர் சாகும்வரை உண்ணாவிரதம்

(ஏ. வி. மாணிக்கம்)

இடம்பெயர்ந்த பல்கலைக் கழகத் தமிழ் மாணவர்கள் நடத்திவரும் உண்ணாவிரதப் போராட்டத்தின் 3-ம் கட்டம் இன்று காலை ஆரம்பமாகவுள்ளது.

இதுதான் இறுதிக்கட்டமாக இருக்கும் என்றும், 9-ம் திகதிக்குள் எங்கள் கோரிக்கையை அரசு நிறைவேற்றுவிடில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்வோம் என்றும் இடம்பெயர்ந்த பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் திரு. ரி. தயாபரன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழக சிவன்கோவில் முன்றலில் முதலாம் கட்ட உண்ணாவிரதம் ஆரம்பமானது. செவ்வாய்கிழமை காலை 2-ம் கட்ட உண்ணாவிரதம் ஆரம்ப

8-ம் பக்கம் பார்க்க)

## ★ தமிழர் பிரச்னை பற்றிய சர்வகட்சி மாநாடு ★

# மற்றுமொரு நிகழ்ச்சித் திட்டம் கட்சிகளுக்கு அனுப்பப்படும்!

# கூட்டணி அரசியல் குழு கொழும்பில் நாளை கூடுகிறது

(இ. கந்தசாமி)

**தமிழர் பிரச்னை தொடர்பான சர்வகட்சி மகாநாட்டில் ஆலோசனைக்கு எடுக்கப்படும் பதினொன்கு அம்ச நிகழ்ச்சித் திட்டத்துடன் மற்றுமொரு நிகழ்ச்சி நிரல் சகல அரசியல் கட்சிகளுக்கும் ஓரிரு தினங்களில் அனுப்பப்படுமா?**

நேற்று முன்தினம் நாடு திரும்பிய கூட்டணித் தலைவர்களுக்கும் திரு. ஜி. பார்த்தசாரதிக்குமிடையே நடைபெற்ற பேச்சுக்களைத் தொடர்ந்து, மேற்படி யோசனைக்கு சாத்தியக் கூறுகள் காணப்படுவதாக நம்பக கரமான வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இம்மாதம் பத்தாம் திகதி ஆரம்பமாகும் சர்வ கட்சி மாநாட்டில் தமிழர் விடுதலை கூட்டணி கலந்துகொள்வது சம்பந்தமாக எழுந்துள்ள பிரச்னைகள் குறித்து, இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் சிறப்புத்தூதர் திரு ஜி. பார்த்தசாரதி ஜனாதிபதியை நேற்றுவரை மூன்றுதடவைகள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். கூட்டணித்தலைவர்களை நேற்று முன்தினம் இரவும், நேற்றுக் காலையும், நேற்று இரவும் (மூன்று தடவைகள் சந்தித்து இதுவரை அவர் ஆலோசனை நடத்தியுள்ளார்.

### 'அமிர்' கருத்து

கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று மாலை 'ஈழநாடு' பத்திரிகைக்கு அளித்த விசேட பேட்டியில்; கூட்டணியின் இறுதி முடிவு, கூட்டணியின் அரசியல் குழுவிடமே (பொலிட் பீரோவிடமே) தங்கியுள்ளது என்றும்; சனிக்கிழமை நடைபெறும் அரசியல் குழுக் கூட்டத்தில் மகாநாட்டில் பங்குபற்றுவதா இல்லையா என்பது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் கூறினர்.

அரசியல் கட்சிகளுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்ட பதினொன்கு அம்ச நிகழ்ச்சித் திட்டத்துடன் மற்றுமொரு நிகழ்ச்சிநிரல் ஓரிரு தினங்களில் அனுப்பப்படும் என்று வெளியான ஒரு தகவல் பற்றிக் கேட்டபோது, திரு. அமிர்த

(8ம் பக்கம் பார்க்க)

# கடத்தல் பொருள்கள் மூலம் ரூ. 1,00,000 கிடைத்தது!

(சுண்டிக்குளி)

யாழ்ப்பாணம் சுங்கத் திணைக்களத்தில் நடந்த காலங்களில் கைப்பற்றப்பட்ட கடத்தல் பொருட்களினால் ஏலவிற்பனை மூலம் ஒரு லட்சம் ரூபா கிடைத்திருக்கிறது.

சில பொருட்கள் விற்பனையாகவில்லை எனவும் தெரிகிறது

# 10வது ஆண்டு நினைவஞ்சலி 10ம்திகதி அனுஷ்டிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தமிழாராய்ச்சி மகாநாட்டில் உயிரிழந்த ஒன்பதுபேரின் பத்தாவதாண்டு நினைவஞ்சலிக் கூட்டம் யாழ். வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னால் உள்ள நினைவுத்தூண்களடியில் இம்மாதம் 10ம் திகதி காலை நடைபெறவுள்ளது.

இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய ஆராதனை வழிபாடுகளுடன் ஆரம்பமாகும் இந்த நினைவஞ்சலிக்கூட்டத்தில் கோப்பாய் எம். பி. திரு. ஆ. மு ஆலாலசுந்தரம் உட்பட தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள் மற்றும் யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், முன்னாள் விரிவுரையாளர் கு, நேசையா ஆகியோர் நினைவு

( 8ம் பக்கம் பார்க்க

# கைக்குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

இரு கோஷ்டியினர்களிடையே ஏற்பட்ட மோதலினால், நேற்று முன்தினமிரவு சுண்டிக்குழி நரியன்குண்டு மைதானத்தில் மூன்று கைக்குண்டுகள் வீசப்பட்டன, இதனால் சிறு சேதம் ஏற்பட்டது. இதுதொடர்பாக பொலிஸார் புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

## பல்கலைக்கழக மாணவர் அனுமதி:

# 9ம் திகதி காலக்கெடுவை வாபஸ்பெறுக!" சிவா - அமிர் கோரிக்கை

(கொழும்பு)

"பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் இம்மாதம் ஒன்பதாம் திகதி தங்கவது பல்கலைக்கழகங்களுக்குத் திரும்பிவிட வேண்டும்' என்று பல்கலைக்கழக மானியக்குழுவும் உயர் கல்வி அமைச்சும் விதித்திருக்கும்காலக்கெடும், வாபஸ் பெறப்பட வேண்டும்" என்று தமிழர் விடுதலை கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரமும், செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கமும் நேற்று கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் கோரியுள்ளனர். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

"இடம்பெயர்ந்த மற்றும் புதிய பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் உட்படஅனைத்து மாணவர்களும் இம் மாதம் ஒன்பதாம் திகதி தங்களது பல்கலைக்கழகங்களுக்குத் திரும்பாவிட்டால் அவர்களது அனுமதி ரத்துச் செய்யப்படும் என்றும் உபகாரச் சம்பளமும் வழங்கப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டிருப்பது ஒரு மனிதாபிமானமற்ற செயலாகும்.

"பேராதனை பல்கலைக் கழக தமிழ் மாணவர்கள் மே மாதத்தில் தாக்கப்பட்டனர். ஜூலையில் சில பல்கலைக் கழக மாணவர்கள் பலர் கொல்லப்பட்டனர். வேறு காரணங்களைச்

(8ம் பக்கம் பார்க்க)

# சுதந்திரக் கட்சி கூட்டணி சந்திப்பு

(கொழும்பு)

சர்வகட்சி மகாநாடுதொடர்பாக தமிழர்விடுதலை கூட்டணித்தலைவர்கள் நேற்று சிறிலங்கா சுதந்திரக்கட்சிக் குழுவைச் சந்தித்து உரையாடினர்.

இச்சந்திப்பின்போது சர்வகட்சி மாநாட்டில் கூட்டணியினர் கலந்துகொள்வதிலுள்ள முட்டுக்கட்டை, சர்வகட்சி மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் சம்பந்தப்பட்ட பிரச்னைக்குரிய அம்சங்கள் பற்றி கூட்டணித் தலைவர்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டது

இச்சந்திப்பில் கூட்டணி சார்பில் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. எம். சிவசிதம்பரம், திரு. ஆர். சம்பந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, திரு. கே. பி. இரத்னாயக்கா, திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி, திரு. ரத்ன தேசப்பிரிய சேனநாயக்கா ஆகியோர் கலந்துகொண்டனர்.

(வெ)

# இணைப்பு இயந்திரம் துப்பாக்கிமுனையில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

மினிவான் ஒன்றில் சென்ற இனந்தெரியாத இளைஞர் கோஷ்டி துப்பாக்கி முனையில் படகொன்றிலிருந்த இணைப்பு இயந்திரத்தை கொள்ளையடித்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை ஊர்காவற்றுறை பொலிஸ் பகுதியில் இக்கொள்ளைச் சம்பவம் நடைபெற்றது. இனந்தெரியாத 6இளைஞர்கொண்ட கோஷ்டியே இக்கொள்ளையை நடத்தியதாகப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

[8-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ரியூற்ரறி வாங்கு மேசைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். சந்திரகுமார், ரஞ்சினி ரெய்லேஸ், பிரதான வீதி, பண்டத்தரிப்பு. (சந்திக் கருகாமை). 10919

7 SRI யமாகா AG 175. ஒரு கலன் பெற்றோலுக்கு 95 கட்டை வேலை செய்யும். நல்ல நிலையில் சில உதிரிப் பாகங்களுடன் உடன் விற்பனைக்குண்டு. விலை விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும். விளம்பர இல 10918 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 10918

நல்ல நிலைமையிலுள்ள மொறிஸ் மைனர் கார் (2 Sri 7715) உடன்விற்பனைக்குண்டு விபரம்: Dr. E உமாகாந்தன், நாயன்மார்கட்டு தற்காலிக வைத்தியசாலை, செம்மணி வீதி, யாழ்ப்பாணம். 10971

ஆனைக்கோட்டை பழைய பொலிஸ் ஸ்ரேசனுக்கு அண்மையில் 3 பரப்புக்காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு; மலிரி சேவிசஸ், 37(351) மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் தியேட்டர் சந்தி) யாழ்ப்பாணம். 10987

Guardian, Tribune, Cinta, ஞானபூமி, மங்கைமலர், கல்கி, சிறுவர்க்கான கோகுலம், விகடன் போன்ற நானாவித சஞ்சிகைகளும் எம்மிடம் (பதிவு செய்து) பெற்றுக் கொள்ளலாம். கேசரி புத்தகசாலை, 236, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 10973

## தேவை

அனுபவமிக்க பிளேட்டின் மெசின் மைண்டர் தேவை. நேரில் வரவும் சித்திரா அச்சகம், இல: 310, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 10966

கொக்குவில் கிழக்கில் உள்ள பிரபல்யமான கல்வி நிறுவனத்துக்கு, விஞ்ஞானம், சமூகக் கல்வி, தமிழ் பாடங்களைப் போதிப்பதற்கு ஆசிரியர்கள் உடனடியாகத் தேவை. இருபாலரும் விண்ணப்பிக்கலாம். பதிவாளர், 'அருணகிரி', கொக்குவில் கிழக்கு. 10985

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சேவிஸ் ஸ்ரேசனுக்கு, வாகனம் கழுவுபவர்கள், ஒயில், கிறீஸ் அடிப்பவர்கள் உடன்தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு கூடிய சம்பளம் வழங்கப்படும். உடன் விண்ணப்பிக்கவும். அ. கந்தசாமி ஈஸ்வரி அரிவுகாலை, மல்லாகம். 10946

யாழ். நகரிலுள்ள புஸ்தக நிலையத்திற்கு கணக்கு வேலையில் நன்கு அனுபவமும், ஓரளவு ஆங்கில அறிவுமுள்ள மகளிர் தேவை. முழுவிபரங்களுடனும் சொந்த கையொப்பத்துடனும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 10975 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 10975

## வைத்தியம்

நாயன்மார்கட்டு ஆஸ்பத்திரியில் நடைபெற்று வந்த பரம்பரை வைத்தியம் (முறிவு, தறிவு) தற்காலிகமாக வைத்தியசாலையின் முன்வீதியில் தொடர்ந்து நடைபெறுகிறது. Dr. ஏ. உமாகாந்தன், நாயன்மார்கட்டு வைத்தியசாலை. 10972

## குத்தகைக்கு

பளை புலோப்பளையில் இருக்கும் சுபாஸ் தென்னந்தோட்டத்தில் 1984 தை மாதம் முதலாம் திகதி முதல் 12 மாதங்களுக்கு விழும் ஓலைகள் குத்தகைக்குக் கொடுக்கப்படும். தோட்டத்தின் விஸ்தீரணம் 50 ஏக்கர். குத்தகை எடுக்க விரும்புபவர்கள் 15-01-84 முன் தொடர்புகொள்ளவும் S. ஹரிகரன் ஹோட்டல் சுபாஸ், 15, விக்டோரியா றோட் யாழ்ப்பாணம் 10925

## பயிற்சி

வெல்டிங் - வயறிங் - மோட்டார் மெக்கானிஸம் (செய்முறை அறிமுறையுடன் புதிய வகுப்புகள் ஆரம்பம்: 7-1-84 உயர்கலைக் கல்லூரி, 73, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 10916

## வகுப்புகள்

ஒரு மாதகால வெல்டிங், வயரிங், மோட்டார் மெக்கானிச வகுப்புகள் ஆரம்பமாகின்றன. பயிற்சி முடிவில் வீடு, மற்றும் வர்த்தக தொழில் நிறுவனங்களுக்கு நீங்கள் சுயமாக வயரிங் செய்யக்கூடிய தகைமையையடைவதோடு, சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சான்றிதழையும் பெறுவீர்கள். J. E. C. 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 10920

## WANTED

M. B. B. S. Doctor wanted for full time employment. No night duties. Apply with names of two medical referees to: The Medical Centre 415. K. K. S. Road, Jaffna. Tel: 24301 (10984)

### சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் 1984

மேற்படி பதிவு செய்தலுக்கான கால எல்லை 15-01-1984 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

த. நவரத்தினராசா,
செயலாளர்.
நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி,
03—01—1984.
10980

### யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை

## வரவுசெலவுத் திட்டம்—1984

1980ம் ஆண்டு 35ம் இலக்க அபிவிருத்திச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 40(பி) பிரிவிற்கமைய யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபையின் மேற்படி வரவு செலவுத் திட்டம் 05—01—1984 தொடக்கம் ஏழு நாட்களுக்கு பொது மக்களின் பார்வைக்காக அபிவிருத்திச் சபை தலைமையலுவலகத்தில் வைக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தேவநேசன் நேசையா,
செயலாளர்,
யாழ்ப்பாணம்
அபிவிருத்திச் சபை.
02-01-1984.
10981

## தேவை

பிரபல லக்சறி பஸ் சேவையாளருக்கு நல்ல தேர்ச்சியும் அனுபவமும் உள்ள டீசல் பெற்றோல் மெக்கானிக் ஒருவரும், அனுபவமுள்ள கிளீனர் ஒருவரும் உடனடியாகத் தேவை. அனுபவத்திற்குத்தக்க சம்பளம் வழங்கப்படும். விரும்புவோர் நற்சான்றிதழ்களுடன் (இருவர் சிபார்சும் வேண்டப்படும்) கீழ்க்காணும்முகவரிக்கு நேரில் வரவும்.

106, ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.
10982

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

கொக்குவில்மேற்கு காலஞ்சென்ற சின்னத்தம்பி சிவஞானரத்தினம் மரணசாதனமெழுதப்படாத சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம்
இல. ரி / 3751

சின்னத்தம்பி சிவஞானரத்தினம் கைம்பெண் இரத்தினம், கொக்குவில் மேற்கு கொக்குவில்.

மனுதாரர்.

எதிராக

1. சிவஞானரத்தினம் சச்சிதானந்தசிவம்
2. சிவஞானரத்தினம் தமிழ்ச்செல்வன்
3. சிவஞானரத்தினம்மகள் செலவகுமாரி (பராயமற்றவர்)
4. சிவஞானரத்தினம் செலவகுமாரன் (பராயமற்றவர்)
5. சிவஞானரத்தினம் பற்குணராசா (பராயமற்றவர்)
6. தம்பு கணேசபிள்ளை-சட்டப்பாதுகாவலர் (3ம், 4ம், 5ம் எதிர்மனுதாரர் சட்டப்பாதுகாவலராக) எல்லோரும் கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

எதிர் மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேல் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984ம் ஆண்டு ஜனவரி மாதம் 13ந் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஒப்பம்
கு. குலசிங்கம்,
பதிவாளர்,

1983ம் ஆண்டு மார்கழி மாதம் 27ஆந் நாளன்று இன்று தேதியிடப்பட்டது.

வரைந்தது
பொ. நவரத்தினம்,
மனுதாரின் சட்டத்தரணி
10974

### கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம் முல்லைத்தீவு

## வெற்றுச் சாக்கு விளம்பரம்

இச் சங்கத்தில் உள்ள பின்வரும் வகையான (5000)ஐயாயிரம் வெற்றுச் சாக்குகள் விற்பனை செய்வதற்குக் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்கள் யாவும் பதிவுத் தபாலில் இடதுபக்க மேல் மூலையில் ''சாக்கு விற்பனை'' எனக் குறிப்பிடப்பட்டு 15-1-1984ம் திகதி நண்பகல் 12-00மணிக்கு முன்பாக தலைவர். கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம், முல்லைத்தீவு என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். விண்ணப்பத்துடன் ரூபா 250/- மீளப் பெறக்கூடிய வைப்பும் செய்யப்படல் வேண்டும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் கேள்வி கிடைத்து மூன்று நாட்களுக்குள் பொருளைச் சங்க வளவில் இருந்து அப்புறப்படுத்தல் வேண்டும். காரியாலய நாட்களில் வெற்றுச் சாக்கினை சங்கத்தில் பார்வையிடலாம்.

### இருப்பிலுள்ள சாக்குகளின் விபரம்

1. பிறிமா, சாக்கு 67 கி.கிரு
2. மாச்சாக்கு 50 ''
3. சீனிச்சாக்கு 50 ''
4. சீனிச்சாக்கு 100 ''
5. அரிசிச் சாக்கு 2½ புசல்
6. அரிசிச் சாக்கு 50 கி. கிறும்.
7. நவதானியம் பெரியவை

பொதுமுகாமையாளர்
பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், முல்லைத்தீவு
28-12-83. 10907

### முதலிலே விதிக்கப்பட்ட பூரண தீர்வை

## அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம்
பருத்தித்துறை

இறந்த விஸ்வலிங்க வன்னியம் கைம்பெண் சேதுநாயகம் அவர்களின் மரணசாதன சொத்துக்கள் சம்பந்தமாக

இல. 1180/T

சிவப்பிரகாசம் பெண் சிவபாக்கியம் வட்டுவத்தை அல்வாய் தெற்கு, அல்வாய்-

மனுதாரர்

இவ்வழக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் மேலே குறிப்பிட்ட இறந்தவரின் மரணசாதனத்தை ஒப்பேற்றுவதற்காக தாக்கல் செய்யப்பட்டது. எனவே முதலிலேயே விதிக்கப்பட்ட பூரண தீர்ப்பு 1983ம் ஆடு ஐப்பசி மீ 25ம் திகதி பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி
(ஒப்பம்)

றிச்சேட் ஜெயராசசிங்கம்,
பதிவாளர்

வரைவு
இ. சதானந்தன்,
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்
புலோலி தெற்கு, புலோலி.
10964

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## நினைவஞ்சலி 18 வது ஜனனதினம்

### கிறிஸ்ரி சந்திரன் டேவிட்
### Christy Chandran David

தோற்றம்: 6 - 1 - 1966
மறைவு: 6 - 2 - 1982

18-வது பிறந்த தினத்தைக் கொண்டாடும் இவ்வேளையில் மலர்ந்தும் மலராமல் நம் எல்லோரையும் ஆறாத்துயரில் ஆழ்த்தி அகால மரணம் எய்திய எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய அன்னாரின் குடும்பத்தினர் இறைவனை எஞ்சுகின்றனர்,

டேவிற்குடும்பத்தினர்,
107, விஸ்ற்லைக் றோட்,
மட்டக்குழிய, கொழும்பு - 15. 10983

## SPOKEN ENGLISH

(6 மாதகால பயிற்சி)
புதிய பிரிவுகள்

**ஆரம்பம்:- 9 - 1 - 84**

பிரபல விரிவுரையாளர்
**K. S. N. குமரன்**

| | | |
|---|---|---|
| பிரிவு: I | திங்கள், வெள்ளி | 8-30 — 10-30 a m. |
| II | திங்கள், வெள்ளி | 11-00 — 1-00 p m. |
| III | சனி, ஞாயிறு | 9-00 — 11-00 a m. |
| IV | சனி ஞாயிறு | 6-00 — 7-30 p m. |

விபரங்கட்கு
**FINANCIAL ASSOCIATION**
402 /2 கே. கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
[சிவன் கோவிலடி] 10978

### இலங்கைப் பல்கலைக்கழக
## பட்டதாரி வகுப்புக்கள்

**B. A.** வகுப்புக்கள்

**ஆரம்பம்: 7-1-1984**

உடன் தொடர்பு கொள்ளவும்.
JASE
**TRIMMER HALL**
CLASSES
21/6, வேம்படி றோட், யாழ்ப்பாணம்.

### இஸ்ரேலிய போர் விமானங்கள்:

# கிழக்கு லெபனானில் பலத்த குண்டுவீச்சு

# 100 பேர் பலி, 400 பேர் காயம்!

## உயிர்ச் சேதம் அதிகரிக்கலாமென அச்சம்

### புதிய ஆண்டின் முதலாவது பெரும் உயிர்ப்பலி

பெய்ரூட், ஜன 5.

**கிழக்கு லெபனானில் நேற்று இஸ்ரேலிய 'ஜெட்' போர் விமானங்கள் பலத்த குண்டு வீச்சு நடத்தின. இதனால் நூறுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர். நானூறு பேர் வரை காயமடைந்தனர். புதிய ஆண்டு ஆரம்பமான பின்னர் பெய்ரூட்டில் இடம்பெற்ற முதலாவது பெரும் உயிர்ச்சேதம் இதுவென்று கூறப்பட்டது.**

கிழக்கு லெபனானில் ஷியா முஸ்லிம் தீவிரவாதிகளின் நிலைகள் மீதே இஸ்ரேலிய விமானங்கள் குண்டு வீசின. இதனைத் தொடர்ந்தே இந்தச் சேதங்கள் ஏற்பட்டன. கொல்லப்பட்டவர்களில் பெண்கள், குழந்தைகள், சிறுவர்கள் உட்பட அநேகர் சாதாரண குடிமக்கள்.

பல கட்டிடங்களும் இடிந்து வீழ்ந்துள்ளன. இடிபாடுகளுக்குமத்தியிலும்பலர் சிக்குண்டு உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இதனால் உயிர்ச்சேதங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஷியா முஸ்லிம் தீவிரவாதிகள் இத்தாக்குதலையடுத்து மிகவும் ஆத்திரமடைந்துள்ளனர். அவர்கள் தமது பலத்த கண்டனத்தைத் தெரிவித்துள்ளதுடன் லெபனானில் இருந்துவரும் இஸ்ரேலியர்களைப் பழிவாங்கப் போவதாகவும் உறுதியெடுத்துள்ளனர்.

இஸ்ரேலிய குண்டு வீச்சுக்கு இலக்கான பல பகுதிகள் ஷியா முஸ்லிம் தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்களைக் கொண்டிருந்தவையாகும். 'பெக்கா' பள்ளத்தாக்கும் பல மாகத்தாக்குண்ட பகுதிகளில் அடங்குகிறது.

உலகநாடுகள் பல இப்பயங்கரதாக்குதல் குறித்து கவலை தெரிவித்திருப்பதுடன் இஸ்ரேலைக் கண்டித்துள்ளன. ஐ.நா. செயலாளர் திரு. ஜாவியா பெரஸ்டி கொய்லரும் இஸ்ரேலின் இத்தாக்குதல்கள் குறித்துக்கண்டித்துள்ளார். (கி)

## எண்ணைத் தாங்கியினுள் மழை நீர்!

(மன்னார்)

மன்னார் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பேசாலை மண்ணெண்ணை விற்பனை நிலையத்தில் நிலத்தினடியில் வைக்கப்பட்டுள்ள எண்ணைத் தாங்கியினுள் மழைநீர் நிறைந்துள்ளதால் விற்பனை தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தின்போதே மண்ணெண்ணைத் தாங்கியினுள் மழைநீர் சென்று நிறைந்தது. இதனால் மண்ணெண்ணைப் பாவனையாளர்கள் பல சிரமங்களை அனுபவித்துவருகின்றனர். (கு)

## "கிராமியக் கலை அருகி வருகிறது"

(சாவகச்சேரி)

"வீடியோ திரைப்படங்கள் கிராமியமட்டங்களில் அறிமுகமானதன் காரணமாகக் கிராமியக் கலைஞர்களின திறமைகள் கலை ஆர்வங்கள் அருகி வருவது மிகவும் கவலைக்கிடமானதாகும்."

இவ்வாறு கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையக்கட்டிட வளர்ச்சிகாக நடாத்தப்பட்ட நாடக விழாவின்போது நிலையத்தின் முன்னாள் தலைவர் திரு. பி. கிருஷ்ணன், தனது ஆரம்ப உரையின்போது தெரிவித்தார். (கு)

## மகாசபைக் கூட்டம்

(இறுப்பிட்டி

புங்குடுதீவு, பெருங்காடு மூத்த நயினார்புலம் வரசித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகாசபைக் கூட்டம் தலைவர் மா. குமாரசாமி தலைமையில் இம்மாதம் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை ஆலய மண்டபத்தில் நடைபெறும். [கு]

## சிரிய ஜனாதிபதியைச் சந்திக்க அமெரிக்க அதிபர் விருப்பம்!

### கறுப்பர் இனவிமானிகுட்மன் விடுதலை

வாஷிங்டன். ஜன 5

சிரிய ஜனாதிபதி அஸாத்தைச்சந்திக்க அமெரிக்க அதிபர் திரு. றொனல்ட் றீகன் விருப்பம் தெரிவித்துள்ளார். நேற்று வெள்ளை மாளிகையில் நடந்த வைபவ மொன்றிலேயே திரு றீகன் இவ்விருப்பத்தை வெளியிட்டார்.

சிரியப்படைகளால் சிறை வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட அமெரிக்க போர் விமான ஓட்டியான றொபேர்ட் குட்மன் என்பவரை வரவேற்கும் வகையிலேயே அந்த வைபவம் ஒழுங்கு செய்யப்பட்டது.

லெபனானில் சமாதானத்தையும், அமைதியையும் ஏற்படுத்துவது மிக அவசியமென்றும், இதற்கு சிரியாவின் ஒத்துழைப்பு தேவையென்றும் இதனாலேயே தாம் சிரிய அதிபரைச்சந்திக்க ஆவலாக இருப்பதாகவும் திரு. றீகன் மேலும் னார்.

சிரியப்படைகளால் அமெரிக்க போர் விமான ஓட்டி றொபேர்ட் குட்மன் இருமாதங்களுக்கு முன்னர் லெபனானில் கைது செய்யப்பட்டார். வேவு பார்ப்பதற்காக அவர் சென்ற போது அவரின் விமானத்தைச் சுட்டு வீழ்த்திய பின்னர் சிரியப்படைகள் அவரைக் கைது செய்தன.

இதனைத் தொடர்ந்து அமெரிக்க கறுப்பர் இன பிரமுகரும், குடியரசுக்கட்சி சார்பில் ஜனாதிபதி தேர்தலில் நிற்க ஆர்வம் கொண்டிருப்பவருமான வண. ஜெஸி ஜக்ஸன் சிரிய ஜனாதிபதியை கடந்த வாரம் சந்தித்தார். அவ் விமானியை விடுதலை செய்யும்படி கோரிக்கை விடுத்தார்.

சிரிய ஜனாதிபதி ஜெஸி ஜக்ஸனின் கோரிக்கையின் பேரிலேயே விமானி குட்மனை விடுதலை செய்வதாக அறிவித்து அவரைவிடுதலை செய்தார்.

விமானி குட்மனும் ஒரு கறுப்பர் இனத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## கைதடிமுகாம்நிர்வாகிகளுக்கு 'நவம்' பாராட்டு

[சாவகச்சேரி]

"அண்மைக்கால கலவரத்தினால் பாதிக்கப்பட்டு, உள்ளக் குமுறல்களுடன் கைதடி அகதிகள் முகாமிற்கு வருகை தந்துள்ள சகோதரர்களுக்கு கடந்த ஆகஸ்ட்மாதம்தொடக்கம் நிறைவான பணிகளைத் திருப்திகரமாக ஆற்றிவருகின்ற அறவழிப் போராட்டக் குழுவின் பணி நிறைவைத் தருவதாகவுள்ளது".

சாவகச்சேரி முன்னாள் எம். பி. திரு வி என். நவரத்தினம் கைதடி அகதிகள் முகாமில் பணிபுரிகின்ற தொண்டர்கள் மத்தியில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

முகாமின் முகாமையாளர் திரு. வீ. எஸ். துரைராஜா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில்

"இந்தியாவில் இருக்கின்ற சமயங்களில், இந்த முகாமினுடைய சிறப்பம்சங்கள் பற்றி பல்வேறுவழிகள்மூலம் அறிந்து மகிழ்ச்சியடைந்திருக்கின்றேன்" என்றார். [கு]

## பிரிட்டிஷ் முன்னாள் அமைச்சரின் இரகசியக் காதலிக்கு பெண் குழந்தை!

லண்டன், ஜன. 5

இரகசிய காதல் விவகாரத்தையடுத்துத் தமது பதவியை ராஜினாமாச்செய்த முன்னாள் பிரிட்டிஷ் அமைச்சர் சிஸில் பார்க்கின்சனின் காதலி சாராகீய்ஸுக்குப் பெண் குழந்தையொன்று பிறந்துள்ளது

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இக்குழந்தை பிறந்தது திருமணமான திரு பார்க்கின்சன் தமக்கும் தமது காதலி சாரா கீய்ஸுக்குமிடையே இருந்த இரகசிய உறவைக் கடந்த அக்டோபரில் வெளிப்படுத்தினார். அத்துடன் தம்மாலேயே அவர் தாய்மை அடைந்ததையும் ஒப்புக்கொண்டார். இதனைத் தொடர்ந்து அவர் தமது அமைச்சர் பதவியையும் ராஜினாமாச் செய்தார்.

சாராவின் வழக்கறிஞர் குழந்தை பிறந்ததை அறிவித்தார். தாயும் சேயும் நலமாக உள்ளனர். சிஸில் பார்க்கின்சன் இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்ததாவது:—

"எனக்குக் குழந்தை பிறந்ததுபற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. அக்குழந்தைக்கு அமைதி, தனிமை, மகிழ்ச்சியான வாழ்வு கிடைக்க வாழ்த்துகின்றேன்".

புளோரா எலிஸபெத் என்று குழந்தைக்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. திரு. பார்க்கின்சன் குழந்தைக்கு நிதியுதவி வழங்குவதாக முன்னர் உறுதியளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. [கி]

## மாவட்ட இடமாற்றம்: இலங்கை ஆசிரியர்சங்கம் நடவடிக்கை!

யாழ்ப்பாணம்)

மாவட்டங்களுக்கிடையிலான இடமாற்றத்தின்போது குளறுபடிகள் நிகழ்ந்ததாகக் கருதப்பட்டு இடைநிறுத்தம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் விடயமாக இலங்கை ஆசிரியர் சங்கம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்துவருகிறது

சங்கம் இவ்விடயமாகக் கல்விச்சேவை ஆணைக்குழுவைச் சந்தித்ததன் விளைவாக இவ்வாசிரியர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்துவதற்கு அவர்கள் இணங்கியபொழுதும் தற்பொழுது இவ்வாசிரியர்கள் விடயமான ஒழுக்காற்றுப் பணிகளைக் கல்வியமைச்சு ஆணைக்குழுவிடமிருந்து கையேற்றுள்ளது.

ஆதலால் சங்கம் கல்வியமைச்சின் செயலாளர், மேலதிகச்செயலாளர் ஆகியோருடன் தொடர்பு கொண்டபோது இவ்விடயம் சம்பந்தமாகவிரைவில் தீர்வுகாண அவர்கள் உறுதியளித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் திரு. எச். என். பெரேரா தெரிவித்துள்ளார். [க]

## இந்தியா,பங்களாதேஷ்எல்லை உறுதியாக போடகோரிக்கை

புதுடில்லி, ஜன. 5

இந்தியா, பங்களாதேஷ் எல்லையில் வேலிகளைப் போடும் பணி துரிதமாக்கப்படவேண்டுமென்று பாரதீய ஜனதாக் கட்சி கோரியுள்ளது.

இக்கட்சியின் கூட்டமொன்றிலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது. பங்களாதேஷ், இந்திய எல்லைப் பகுதிகள் தகுந்த வகையில் பேணப்படவில்லை. இதனால் பங்களாதேஷிலிருந்து பலர் அகதிகளாக அடிக்கடி இந்தியாவுக்குள் நுழைந்துவிடுகின்றனர். இவ்வாறு நுழைந்தோராலேயே கடந்த ஆண்டு பெரும் இரத்தக்களரி ஏற்பட்டது.

இதுதவிர, பங்களாதேஷ் இந்திய எல்லையின் பாதுகாப்பற்ற நிலைமையைப் பயன்படுத்தி இரு நாடுகளின் சமூக விரோத சக்திகளும் தமது நடவடிக்கைகளை அச்சமின்றிமேற்கொள்கின்றன.

எல்லைக் காவல் படைகள் பங்களாதேஷ் விவசாயிகளைத் துன்புறுத்துவதும். விவசாயிகள் எல்லைக் காவல் படையினரைத் திருப்பித் தாக்குவதும் பாதுகாப்பற்ற நிலையினால் அடிக்கடி இவ்விரு நாட்டு எல்லையிலும் நிகழ்வதுண்டு. [கி]

## பொதுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் இம்மாதம் 18-ம் திகதி யாழ். நகரமண்டபத்தில் நடைபெறவுள்ளது பிரதமவிருந்தினராக யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் கலந்து கொள்வார். [கெ]

## வீதி மோசமாக்கப்பட்டதால் கிராமத்துக்குள் கடல் நீர்

[மானிப்பாய்]

அரியாலை கிழக்கு முதலாம் மைல் வீதி சமீபத்தில் பெய்த பெருமழை காரணமாக படு மோசமான நிலையை அடைந்துள்ளது. இதனால் இப்பகுதிப் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வீதியால் அடிக்கடி போக்குவரத்தில் ஈடுபடும் ட்ருக்டர்களும் இந்த வீதியை மோசமான தாக்கிவிட்டுள்ளது.

இப்பகுதியின் வீதிக்கருகில் சட்டவிரோதமாக அதிகமான அளவு மண் அள்ளப்பட்டுவருவதால் கடல்நீர் இம்முறை பெய்த மழைக்கு வீதியைக் கடந்து பூம்புகார் கிராமத்துக்குள் புகுந்து சில குடிசைகளைச் சேதப்படுத்தியுள்ளது. அத்துடன் இந்த உவர்நீர் இங்கு புகுந்து படிந்துள்ளதால் விவசாயத்துக்கு இந்த நிலம் லாயக்கற்றதாகியுள்ளது. வீதி ஓரிருமாதங்களுக்கு முன்புதான் திருத்தப்பட்டதென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### மணிவாக்கு

பாமர மனிதனில் ஆண்டவனுக்கு அதிக விருப்ப மிருக்கிறது; இல்லாவிட்டால் கோடிக்கணக்கில் அவர்களைப் படைத்திருப்பாரா?

— ஆபிரகாம் லிங்கன்

# இடம் பெயர்ந்த ஆசிரியைகளுக்கு அடுத்த வாரம் 3 மாதச் சம்பளம்!

## தமிழர் ஆசிரியர் சங்க செயலாளர் தகவல்

(கொழும்பு)

ஜூலைக் கலவரங்களினால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்த ஆசிரியைகளுக்கு இடம் பெயர்ந்த மாவட்டத்தில் கடந்த மூன்று மாதச் சம்பளமும் அடுத்த வாரம் வழங்கப்படவுள்ளது. அதே நேரத்தில் வேலைக்கு இன்னமும் செல்லாமல், இருக்கும் இடம்பெயர்ந்த ஆண் ஆசிரியர்களின் மேன்முறையீடுகள் பரிசீலனையிலுள்ளது. அவர்களது முறையீடுகள் உண்மையெனக் காணும் பட்சத்தில், அவர்களுக்கும் மூன்றுமாதச்சம்பளமும் வழங்கப்படும்.

இந்தத் தகவலை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார். கடந்த மூன்று தினங்களாக இடம் பெயர்ந்த ஆசிரியர் பிரச்னைகள் தொடர்பாக கொழும்பில் கல்வியமைச்சின் அதிகாரிகளுடன்தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தைகளை திரு. மகாசிவம் தலைமையில் தூதுக்குழு நடாத்திவருகிறது.

கல்வியமைச்சின் செயலாளர் திரு. ஈ. எல். விஜேயமானேயை நேற்று திரு மகாசிவம், நிர்வாகச்செயலாளர் திரு. த. அருணகிரிராஜா ஆகியோர் மூன்றும் நாளாகச் சந்தித்துப் பேசினார்கள்.

கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்க, ஏற்கனவே இலங்கை தமிழர் ஆசிரியர்சங்

(5ம் பக்கம் பார்க்க)

# நமது நோக்கு

## நைஜீரியா

ஆபிரிக்க நாடுகளில் நாம் அதிகம் கேட்டறிந்த நாடு நைஜீரியா. இலங்கையர் பலர் - குறிப்பாகயாழ்ப் பாணத்தமிழர்கள் ஆயிரக் கணக்கில் அங்கு தொழில் செய்கின்றனர்.

இவற்றுள் அதிகமானவர்கள் பட்டதாரிஆசிரியர்கள்; அத்துடன் டாக்டர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள் சிலர் உயர்ந்த ஊதியம் கருதி அங்கு சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள பல பெரிய கல்லூரிகளின் திறமையான பட்டதாரி ஆசிரியர்கள் அங்கு ஈர்க்கப்பட்டது ஊரறிந்த விடயம். பிரம்மாண்டமான சம்பளமே தனிக்காரணம்.

சுதந்திர நைஜீரியா மிக விசாலமான நாடு; பல மாநிலங்களைக் கொண்டது. சுவாத்தியம், விவசாயம், எண்ணெய்வளம் தொழில் போன்ற விடயங்களில் மாநிலத்துக்கு மாநிலம் பெரும் வேறுபாடு உடையது. ஊருக்கு ஊர் போக்குவரத்து சுமார் ஆயிரம் மைல் கணக்கில் அமைந்துள்ளது.

வெவ்வேறு மாநிலங்களில் தொழில்புரியும் எமது நாட்டுவூர் உத்தியோகத்தர்கள், விடுமுறைக்கு லண்டனில் சந்திப்பது, நைஜீரிய தேசத்தில் கண்டு பழகுவதிலும் பார்க்க மிக இலகுவானதென்றுசொல்லப்படுகிறது.

எண்ணெய் நாடுகளின் செல்வமே நைஜீரியாவின் பெரும் வருமானத்துக்கு அடிப்படையாக விருந்து வந்தது. நாட்டை அபிவிருத்தி செய்யும் பாரியதிட்டத்திலே வெளிநாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் உயர் உத்தியோகத்தர்கள், நாட்டின் பல துறைகளிலும் கடமையாற்றிவருகின்றனர்.

கல்வித்துறையில் இலங்கை ஆசிரியர்களுக்கு பெரும்பாலும் தமிழர்களுக்கு பெருமதிப்பு இருந்து வந்தது. இவ்வித பெரும் கிராக்கியை மட்டுப்படுத்த இடைக்காலத்தில் பட்டதாரித்தமிழர்கள் அங்கு செல்ல முடியாது தடையொன்று இங்கு நடைமுறையிலிருந்ததும் நாமறிந்த விடயம்.

இன்று நைஜீரியாவின் எண்ணெய் வருமானம் குன்றிய நிலையில் பொருளாதாரம் படுமோசமாகச் சீர்குலைந்து விட்டதால், ஜனாதிபதி ஆட்சி கவிழ்க்கப்பட்டுவிட்டதென்றும், சதி புரட்சி மூலம் இராணுவம் ஆட்சியைமீண்டும் கைப்பற்றியுள்ளதாகவும் செய்திகள் கிடைத்திருக்கின்றன. அவை நம்பக் கூடியதாக ஊர்ஜிதப் படுத்தப்பட்டுள்ளது.

பொருளாதாரம் சீர்குலைந்து வரும் செய்தி எங்கள் யாழ்ப்பாணத்திலேயே நாம் சில காலமாகக் கேட்டறிந்த கதை. நாட்டின் பல மாநிலங்களில்தொழில் புரியும் யாழ்ப்பாண ஆசிரியர்கள் சம்பளம் ஒழுங்காகப் பெறுதிருப்பது எம்மிற் பலர் அறிந்த புதினம்.

இவ்வாறுபல்வேறு சேவைகளில் குறிப்பாக அரசாங்க சேவை, கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளிலுள்ள பெரும் உத்தியோகத்தர்கள் ஒரு வருடத்துக்கே ஊதியம் பெற முடியாது திண்டாடுகின்றனராம்.

இந்தப் பொருளாதார நெருக்கடி புரட்சிக்கு எவ்வளவு தூரம் காரணமென்பது நாம் இன்னும் சரியாக ஆராய முடியாத காரியம். ஆனல் துரதிர்ஷ்டத்துக்குப் பலியான இப் பெரும் நாடு பதின்மூன்று வருடங்கள் இராணுவ ஆட்சியையே அனுபவித்தது; நீண்டகாலமாக உள்நாட்டுப் போரில் நலிந்தது; பிரிவினை கோரிய கிழக்கு நைஜீரியா முப்பது மாதப் போரில் தோல்வி கண்டதும் இராணுவ ஆட்சியில் நாடு ஒருமைப்பாடு கண்டது.

நைஜீரிய தேசிய கட்சி அரசியல் கட்சியாக உருவான காலத்தில் அதன் தலைவர் சகாரி 1979ம் ஆண்டு நடந்த முதலாவதுபொதுத் தேர்தலில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

பொது மக்களின் ஆதரவும் அரசியல் அனுபவமும் பெற்ற ஜனாதிபதி நான்கு ஆண்டுகளுக்கு ஆட்சி புரிந்தார். சென்ற வருட முடிவில் நடந்த பொதுத் தேர்தலில் மக்களின் பேராதரவுடன் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். சுமார் மூன்று வாரம் அப்பதவியில் அமர்ந்திருந்தார்; ஒரு மிகச் சிக்கனமான பட்ஜட்டை சமர்ப்பித்தார்.

மூக்குமுட்ட நாடு கடன் பட்டிருந்த நிலையில் ஊழல் ஆட்சியின் மூலை முடுக்கெல்லாம் பரவிப் பாதிக்க, கடன் மீட்டுக்கொள்ள முடியாதகட்டத்தில், ஆட்சியை பறிகொடுத்ததும் இன்றைய நிலை என்று சொல்லப்படுகிறது.

'ஆற்றங்கரையில் மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழும்' என்பது முடியாட்சியில் மட்டுமல்ல, குடியாட்சியிலும் காணப்படுவது இக்கால அனுபவம்; இராணுவ ஆட்சி அதற்குப் பரிகாரமல்லவென்பது பாகிஸ்தான், டங்களாதேஷ் கற்பிக்கும் பாடங்கள்.

ஊழல், ஒழுக்கமற்ற பொது வாழ்வு ஆட்சியைக் கவிழ்த்து விடுவது வியப்பல்ல.

# மக்கள் கருத்து

## மினி மிருகக்காட்சி சாலையும் மினி பூங்காவும்

யாழ். மாநகரசபை நிர்வாகத்தின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்ற 'சுப்பிரமணியம் பூங்காவில் மினி மிருகக்காட்சி சாலை ஒன்றை ஏற்படுத்த யாழ் மாநகரசபை நிர்வாகம் முயற்சி எடுத்து வருகின்றது. யாழ். குடாநாட்டில் ஒரு சிறிய மிருகக் காட்சிசாலை இல்லையே என்ற குறை போக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கலாம்.

இந்த சிறிய பூங்காவினுள் [இலங்கையிலே மிகச் சிறிய பூங்கா] இடவசதிகள் மாலை நேரங்களில் வருகின்றபார்வையாளர்கட்கு போதாமலும் கண்ணுக்கு குளிர்ச்சியான மரங்களும் பூச்செடிகளும் குறைவாகவும் சீரான பராமரிப்பற்றதாகவும் காணப்படும் அதே வேளையில் இவ்வாறு ஒரு மினி மிருகக் காட்சிச் சாலையை ஏற்படுத்துவது உசிதமானதல்ல.

இதற்காகச் செலவிடப் படுகின்ற பணத்தை ஹரன் தியேட்டர், வீதியையும், யாழ். நவீன சந்தை மலகூடம் மின்சார நிலைய வீதியிலுள்ள மலகூடத்தையும் ஒழுங்காகத் திருத்தி அமைக்கப் பயன்படுத்தப்பட்டால் யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு மட்டுமல்ல சகலருக்குமே அந்தப் பணம் பயன்படத்தக்கதாக அமையும்.

பண்பாளனும் சேவையாளனும் சிறந்த நிர்வாகியுமான மாநகரசபை ஆணையாளர் அவர்கள் மக்களின் சார்பில் இந்த மினி மிருகக்காட்சி சாலையமைப்பை மீள ஆராய்ந்து வேறு திட்டங்களில் பயன்படுத்தத்தக்கவகையில் செயற்பட முன்வர வேண்டும்.

— ஞானசிவம்
(பல்கலைக்கழகம்)
யாழ்ப்பாணம்.

## இந்த வீதியின் நிலை

யாழ் - பருத்தித்துறை வீதி என்றுமில்லாதவாறு இம்முறை காட்சியளிக்கின்றது.

பருத்தித்துறை வீதி பலாலி ரோட்டாகவும், பருத்தித்துறை வீதியாகவும் பிரியும் இடத்திலிருந்து சைக்கிளில் பிரயாணம் செய்ய ஆரம்பித்தால் இந்த வீதியின் பரிதாப நிலையை அறியலாம். இந்த இரு வீதிகளும் பிரிகின்ற இடத்தில் வீதியின் நிலைமையை என்னவென்று தான் சொல்வது. ஒரே கிடங்குகற்களும் மூடியவெள்ளமும் அருகில் சேறும் சகதியுமாகக் காட்சியளிக்கின்றது. கிடங்குகளை வெள்ளம் நிரம்பியிருப்பதால் எது கிடங்கு என்று தெரியாமல் சைக்கிளைச் செலுத்தவேண்டியநிலை இருக்கின்றது இந்தவீதிக்கு இந்நிலை ஏற்பட்டு 3 மாதங்கள் ஆகின்றன, மாநகரசபையால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

-ந. வசந்தகுமார்
(பாடசாலை மாணவன்)
யாழ்ப்பாணம்.

## வேறுபாட்டைத் தீர்த்துக் கொள்ளுங்கள்

30-12-83 ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்த தமிழீழ விடுதலை அணியின் தலைவர் டாக்டர் தர்மலிங்கம் அவர்கள் அணியில் இருந்து நீக்கப்பட்டார் என்ற செய்தியைக்கேட்டவுடன் எம்மைப் போன்றவர்களின் உள்ளங்கள் வேதனைப் படாமலிருக்காது நாடு கடந்து வரும் செய்திகளில்கூட இலங்கைத் தமிழர்களிடம் ஒற்றுமையில்லை அதை முதலில் தீர்க்க வேண்டும் என்ற குரல்தான் அதிகம் குறிப்பாக இலங்கை தமிழினத்தின் பக்கத் தோழனாக விளங்கும் தமிழ்நாட்டு முதலமைச்சர் எம். ஜி இராமச்சந்திரன் அவர்கள் தமிழினத்தின் தலைவர்களால் தோன்றி இருக்கும் கருத்துக்களையும் பிளவுகளையும் தீர்க்கவேண்டுமென்றே குரல் எழுப்புகின்றார். இங்கு என்னவென்றால் கட்சிகளிலும் இயக்கங்களிலும் இருக்கும் தலைவர்களிடம் ஒரு கருத்து செயலாளரிடம் வேறு கருத்து சபையோரிடம் ஒரு கருத்தாக மக்களைக்குழப்பியடிக்கும் நிலை

ஐயோ ஏன் தமிழினத்துக்கு இப்படியான சோதனை புயலிலே அகப்பட்ட கப்பல்போல் தத்தளித்துக்கொண்டு இருக்குமவேளையில் தமிழினத்துக்கு மேலும் தலையிடியா?

தமிழினத்துக்கு முன்னோடிகளாகத் திகழும் தலைவர்களே, நண்பர்களே முதலில் இனத்துக்கிடையில் இருக்கும் வேறுபாட்டைத் தீர்க்குமுன் உங்களுக்குள் இருக்கும் கருத்து வேறுபாட்டைத் தீர்ப்பதற்கு வட்டமேசை மகாநாட்டைக் கூட்டுங்கள்,

ம. பயஸ்
உரைப்புலம்,
ஆனைக்கோட்டை.

## இலவச கண்ணாடிகள்

(கிளிநொச்சி)

கடந்த வருடம் கிளிநொச்சி வைத்தியசாலையில் கண்ணில் சத்திரசிகிச்சை மேற்கொண்ட சகல நோயாளர்களுக்கும் கண் பரிசோதனை செய்யப்பட்டு, இலவச கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளைக் கிளிநொச்சி - பரந்தன் ரோட்டரிக் கழகம்செய்துவருவதாகக் கழகத் தலைவர் டாக்டர் என், சிறீதரன் தெரிவித்தார்.

கண்ணாடி வழங்குவதற்கான முழுப் பணத்தையும் சுவிற்சலாந்து தூதரகம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. 300 நோயாளருக்கான கண்ணாடிகளை வாங்க சுவிற்சலாந்து தூதரகம் 81 ஆயிரம் ரூபாவை ரோட்டரிக் கழகத்திற்குவழங்கியுள்ளது.

## வெள்ளிச் சிந்தனை

### வைகறை வழிபாடு

அருளாளன்

தொழுதெழுதலுக்கும் தொழ எழுதலுக்கும் வேறுபாடு அதிகம்.

தீபாவளிக் கொண்டாட்டத்தையே ஒருமாதமாக நினைத்துக் கொண்டிருக்கும் சிறுவர்கள் தீபாவளிக்கு முதல் நாள் தாமதித்துப் படுக்கைக்குச் சென்றாலும், புத்தாடைஉடுத்தும் ஆவலில் தீபாவளியன்று தாமாகவே நித்திரைவிட்டெழுந்து விடுவர். படுக்கும் பொழுது மட்டுமன்றி நித்திரை கொள்ளும்போது கூட தீபாவளி எண்ணமாகவேயிருந்து நித்திரையிலிருந்து விழித்தல் போன்று. இறை வழிபாட்டையே மனித வாழ்வின் அருப்பெரும் பேறாக மதித்து வாழ்பவர் நித்திரை விட்டெழும்போதே தொழுத வண்ணம் எழுவர். இதுவே தொழுதெழுதல எனப்படும்.

ஏனையோர் கடவுள்வழிபாடாகிய கடமையைச் செய்யவே வேண்டும் என்னும் பொறுப்புணர்வினால் சிரமப்பட்டு நித்திரைவிழித்த பின், இறைவழிபாட்டில் ஈடுபடுதல் இரண்டாவதான தொழ எழுதல் என்பதின் கருத்தாகும்.

அறிவுகெட்டு மயங்கிய நிலையில் நித்திரைகொள்ளுதலே தினமும் வரவேற்கத்தக்கது எனக்கருதிக்கண்ணைத்துயின்று அவமே காலத்தைப் படுக்கையில் போக்குதலினும் பார்க்க வைகறை வழிபாட்டை விரும்புதல் ஆயிரம் மடங்குசிறப்புடையது எனலாம்.

கணவனைத் தொழுத வண்ணமே எழும் கற்புடை மாதர் போல் இறைவனைத் தொழுதெழுபவராகிய - தேவர்களும் வணங்கும் பெருமை நிரம்பிய மெய்யன்பர் பெருமையோ அளவிடல் அரிது,

வருடம் 365 நாளும்வைகறையில் துயிலெழும்போது இறைவனைத்தொழுவென்றே எழுதல் நன்றாகும். அப்படி இயலாதவர்கள் மார்கழி மாதத்தின் ஒவ்வொருநாளும் வைகறையில் எழுந்து வழிபாட்டில் ஈடுபட வேண்டும் என்பது சைவ சமய சாஸ்திரமுடிபாகும்

சூரியன், வாயு போன்ற முப்பத்துமுக்கோடி தேவர்களுக்கும் வைகறைக் காலமான மார்கழிமாத வைகறை வழிபாடு இறையருளோடு தேவ ஆசியையும் கிடைக்கச்செய்யும். தேவர்கள் விழித்தெழுந்து கடவுள் வழிபாட்டில் ஈடுபடும்போது நாமும் வழிபாடுசெய்தால் பூவோடு சேர்ந்த நாரும் மணம்பெறுதல் போன்று தேவர்கள் வழிபாட்டோடு நமது வழிபாடும் சிறக்கும்.

எங்கள் நாட்டமைப்பிலும் சூரியோதயத்திற்கு முந்திய உதணித்தியாலம் மன ஒடுக்கத்திற்கும் தெளிந்த சிந்தனைக்கும் ஏற்றது என்பதாலே அதிகாலையில் நித்திரைவிட்டெழுந்தவுடன் மாணவர்கள் படிக்க வேண்டும் என்பர்.

"வெந்த சாம்பல் விரை எனப்பூசியே
தந்தையாரொடு தாயிலர் தம்மையே
சிந்தியா எழுவார் வினை தீர்ப்பரால்
எந்தையாரவர் எவ்வகை யார் கொலோ.

— திருஞானசம்பந்தர்

# கிளிநொச்சி தவறணைகள் உடைப்புக்கு கண்டனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான பல தவறணைகள் உடைக்கப்பட்டதற்கு வன்மையான கண்டனம் தெரிவித்து சங்கத்தின் புதிய தலைவர் செ. சிறீஜெயச்சந்திரன் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தை அண்மைக் காலம்வரை நிருவகித்து வந்த தலைவரும், ஏனைய நிருவாகிகளும் ஊழல்மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் இச்சங்கம் பல வழிகளிலும் பின் தங்கிய நிலையில், சங்கத்தை மூடவேண்டிய நிலை ஏற்பட்டது இதனால் பல தொழிலாளர்கள் வேலை இழக்கும் நிலைக்கும் ஆளாக வேண்டிய நிலையில் இருந்தனர்.

இதை அவதானித்த நாம் கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளருக்கு முறையிட்டதன் பேரில் 22-12-1983ல் எம்மால் முன்னைய நிர்வாகத்திற்கெதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளரால் கூட்டப்பட்ட விசேடபொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

அன்றைய கூட்டத்தில் முன்னைய சபை கலைக்கப்பட்டு புதிய நிர்வாகிகள் தெரிவானார்கள்.

இதன் எதிரொலியாக எமது புதிய நிர்வாகத்திற்கு பலவழிகளிலும் இடைஞ்சல் தரும் நோக்குடன் சில விஷமிகள் எமது சங்கத் தவறணைகள் பலவற்றினை உடைத்து வன்முறைகளை தூண்டிவிட்டு ஊழியர் தொழிலாளர் மத்தியில் பெரும் குழப்பநிலையை ஏற்படுத்தி வருகின்றனர்.

# "சுயநலமற்ற சேவைமூலம் நற்பணியாற்ற முடியும்"

## பிரிவுபசார விழாவில் கல்வி அதிகாரி

(கல்வியங்காடு)

சுயநலமற்ற சேவையை ஆற்றுவதன் மூலமே சமுதாயத்துக்கு நற்பணிகளைப் புரிய முடியும் திருக்குடும்ப சகோதரிகள் இந்தவகையினரே."

இவ்வாறு நல்லூர் சென் பெனடிக்ற் றோ. க. பாடசாலையின் அதிபராக இருந்து யாழ். டொன் பொஸ்கோ பாடசாலையின் அதிபராக இடமாற்றம் பெற்றச்சென்ற சகோதரி ஸ்ரனிஸ்லஸ் மேரிக்குப் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் சேர்ந்து நடாத்திய பிரியாவிடை வைபவத்தில் தலைவராக கலந்து கொண்டு நல்லூர் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. சி. சிவநாயகமூர்த்தி பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் "நாற்பது பிள்ளைகளையே சுமார் ஆறு வருடங்களுக்கு முன்னர் கொண்டிருந்த இப்பாடசாலை தற்போது பாடசாலைக்கட்டிடமே போதாதென்ற நிலைமைக்கு மாணவர்கள் சேர்ந்து படிக்கும் பாடசாலையாக உயர்ந்துள்ளது. நூறுவருடகால சரித்திரம் கொண்ட இப்பாடசாலையின் திடீர் வளர்ச்சியை இந்த ஆறுவருடகாலத்தில் இப்பகுதி மக்களுக்காக செய்தவர் சகோதரியாவார்" என்றார்.

முன்னையநல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. கு சோமசுந்தரம் பேசுகையில் "சகோதரிகள் சமூக சேவைக்கெனவே தம்மை அர்ப்பணித்தவர்களாவர். இவர்கள் ஏணியும் தோணியும் போன்றவர்கள். ஏணி பிறரை உயரத்துக்குச் செல்ல உதவும் இருந்த இடத்திலேயே நிற்கும். தோணியும் அவ்வாறே தொடர்ந்தும் கடலில் நிற்கும் ஆனால் தன்னில் சுமந்தவர்களை கரை சேர்த்துவிடும்" என்றார்.

# "குடும்பநலத் திட்டம் மக்கள் மத்தியில் வேர் ஊன்ற வேண்டும்"

(புலோலி)

"யாழ்ப்பாண மாவட்டத்தின் பொருளாதார வளம் பெருக குடும்பநலத் திட்டம் வெற்றிபெற வேண்டும். பாடசாலைகளில் கூட பாலியல் கல்வியைப் பாடமாக்க வேண்டிய காலம் வெகு தூரத்திலில்லை"

இவ்வாறு இலங்கை குடும்பத்திட்டச் சங்க யாழ்ப்பாண மாவட்ட குடும்பநலத் தொண்டர் சம்மேளனத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்ப்பாண மாவட்ட சுகாதார சேவைகள் அத்தியட்சகர் வைத்திய கலாநிதி கே. மாணிக்கம் குறிப்பிட்டார். யாழ்ப்பாண மாவட்ட இலங்கைக் குடும்பத்திட்டச் சங்க செயற்குழுத் தலைவி திருமதி யோகேந்திரா துரைசுவரமி தலைமையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய வைத்திய கலாநிதி மாணிக்கம் மேலும் குறிப்பிட்டதாவது:

"குடும்பத் திட்டச் சங்கதிற்கும் சுகாதார இலாகாவிற்கும் நெருங்கிய தொடர்புண்டு முன்னர் சுகாதார இலாகாவும் குடும்பநலத்திட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தது. ஆனால் 1977ம் ஆண்டு முதல் சுகாதார இலாகா நிதிப்பற்றுக் குறைவால் குடும்ப நலத்திட்டத்தில் தன்னுடைய பங்களிப்பைச் செலுத்த முடியவில்லை.

சனத்தொகை அதிகரிப்பினால் பல்வேறு பிரச்னைகள் ஏற்படுவதனாலும் மக்களின் வாழ்க்கையை வளம் படுத்து முகமாகவும் அரசாங்கம் குடும்ப நலத்திட்டத்தை ஊக்குவித்து வருகின்றது. முன்னர் குடும்ப நலத்திட்டத்தை ஏற்பதற்குப் பலர் மறுத்தனர். ஆனால் தற்போது குடும்பத்திட்டத்தைப் பற்றி நன்கு அறிந்துள்ளனர். பாடசாலைகளில் கூட பாலியல் கல்வியைப் பாடமாக்க வேண்டிய காலம் வெகுவிரைவில் வருமென எதிர்பார்க்கலாம்.

"குடும்பநலத்திட்டம் மக்கள் மத்தியில் வேர் ஊன்ற வேண்டும். குடும்பத்திட்டச் சங்கமும் சுகாதார இலாகாவும் மற்றைய நடவடிக்கைகளுடன் குடும்ப நலத்திட்ட நடவடிக்கைகளிலும் சிறப்பாக ஈடுபட வேண்டும்.

'1984-ம் ஆண்டு இப்பகுதிகளில் உள்ள மருத்துவமாதர்களுக்கான வெற்றுடங்களை நிரப்பி ஆரம்பசுகாதார நிலையங்களை அமைத்துச் செயற்பட வேண்டும். யாழ். மாவட்டத்தில் குடும்பநலத்திட்டம் வெற்றியளிக்க வேண்டும் பொருளாதாரம் பெருக வேண்டும். குடும்பசுகாதாரம் பேணப்பட வேண்டும் சுகாதார இலாகாவினதும் குடும்பத் திட்டச் சங்கத்தினதும் குறிக்கோள் ஒன்றுதான். குடும்பநலத் திட்டத்திற்குச் சுகாதார இலாகாவினால் வழங்கக்கூடிய சகல உதவிகளையும் இப்பகுதிக்கு நான் வழங்குவேன்" என்றார்.

இச்சம்மேளனக் கூட்டத்திற்கான சகல ஒழுங்குகளையும் இலங்கை குடும்பத் திட்டச் சங்க யாழ். மாவட்ட திட்டமிடல் அதிகாரி திரு ஏ. எஸ். பூவேந்திரன் மேற் கொண்டிருந்தார்.

## இடம் பெயர்ந்த

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்துக்கு அளித்த வாக்குறுதிப்படி, இடம் பெயர்ந்த மாவட்டத்திலேயே பெண் ஆசிரியைகளின் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதச் சம்பளங்கள் வழங்குமாறு தம்மைப் பணித்துள்ளதாகவும், இடம் பெயர்ந்துள்ள மாவட்டங்களின் கல்விப் பணிப்பாளர்களுக்கு மூன்றுமாதச்சம்பளத்தையும் வழங்கும்படி சுற்றறிக்கை அனுப்பிவைத்துள்ளதாகவும், திரு ஈ. எல். விஜேமானே தங்களிடம் தெரிவித்ததாக திரு. மகாசிவம் கூறினார்.

மீண்டும் பழைய பாடசாலைகளுக்குச் செல்லாமல் இருக்கும் இடம் பெயர்ந்த ஆண் ஆசிரியர்கள் பிரச்னை சம்பந்தமாக திரு. விஜேமானேயுடன்பேச்சு நடத்தியதாகவும், அவர்களின் மேன் முறையீடு தனித்தனியாகப் பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகவும், அவை சரியானவை என்று காணும் பட்சத்தில், அவர்களின் மூன்றுமாதச் சம்பளமும் இடம் பெயர்ந்துள்ள மாவட்டத்திலேயே வழங்கப்படும் என்றும் அவர் உறுதியளித்ததாகவும் திரு. மகாசிவம் மேலும் தெரிவித்தார்.

## நூல் விமர்சனம்

நூல்:- பொன்னாலை வரதராஜப் பெருமான் புதிய தேர் வெள்ளோட்ட மலர்.

வெளியீடு:- பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேர்த் திருப்பணிச் சபை.

விலை:- 15/- ரூபா.

ஒரு திருப்பணிச் சபை வெளியிடும் மலர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு முன் மாதிரியாக இம்மலர் விளங்குகின்றது. ஆலயத்தைப் பற்றிய பல வேறு விதமான குறிப்புக்களும், திருப்பணி நடைபெற்ற வரலாறும், சைவ சமயிகளுக்குப் பிரயோசனமான பல விடயங்களும் இதில் இடம்பெற்றுள்ளன.

சுமார் 80 பக்கங்களை இம் மலர்கொண்டுள்ளது. இவற்றில் மூன்று பக்கங்களில் மட்டுமே தேர்த் திருப்பணிபற்றிய கணக்கு விபரங்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் வெளியாகியுள்ளன. மற்றைய பக்கங்கள் பயன்பாடுள்ள ஒரு சிறு பிரபந்தமாகவே காணப்படுகின்றது.

காஞ்சிகாமகோடி பீடாதிபதிகள் முதற்கொண்டு அமெரிக்க சுவாமிகள் சிவாய சுப்பிரமுனியர் உட்பட சமயவாதிகள், அறிஞர்கள், பக்தர்களின் கிருஷ்ண வழிபாடு குறித்த பல் வேறுபட்ட அனுபவங்களும், கருத்துக்களும் இம்மலரில் வெளியாகியுள்ளன.

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் ஈழத்தில் மிக முக்கியமான ஒரு கிருஷ்ண வழிபாட்டுத்தலம். இத்தேவஸ்தானம் நீண்ட வரலாற்றுச் சிறப்புடையது. தட்சண கைலாய புராணத்திலேயே இவ்வாலய மகிமைபற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதுபற்றிய விளக்கங்கள் இம் மலரில் சுருக்கமாக நன்கு இடம்பெற்றுள்ளன.

திருக்கோவில் வழிபாடு. தேர் உற்சவ விளக்கம் என்பவை பற்றி நம்மவர்களில் பேசாதவர்கள், எழுதாதவர்கள் இலலை. இவைபற்றி இன்று ஒரு பெரும் இந்து சமய சமூகத்தைக் கட்டி எழுப்பப் பாடுபட்டுவரும் அமெரிக்க சுவாமிகள் சிவாய சுப்பிரமுனியர் கூறும் கருத்துக்கள் இச்சிறு பிரபந்தத்தில் இடம்பெறுகிறது

"ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் திருத்தேர் இன்றியமையாததொன்றாகும். இறைவனைச் சூழவரும் தேவர்கள் மற்றும் கணங்களுக்கு திருக்கோயில் இல்லமாக இருக்கின்றது. கோயிலுக்கு வெளியேயுள்ள அடியவர்களுக்கெல்லாம் அவனருளைத் தந்துதவி நிற்பது திருத்தேராகும்" என்று சுப்பிரமுனியசுவாமிகள் தமது விளக்கங்களின் ஒரு பகுதியில் குறிப்பிட்டுள்ளார்.

'பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமானும், அடியார்களும்' என்ற தலைப்பில் பிரம்ஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் அழகிய கட்டுரையொன்றை எழுதியுள்ளார். தமது இறைசேவையின் நீண்டகால அனுபவத்தை அதில் அவர் கூறியுள்ளார்.

"நல்ல புத்திமான் ஆரோக்கியமில்லாமல் பலமில்லாதவனாக இருப்பான். பெரிய பலசாலி மண்டுவனாக இருப்பான். இரண்டும் இருந்தாலும் கோழையாக இருப்பான். எத்தனை திறமை இருந்தாலும் அவற்றைப் பிரயோகிககும் சுறுசுறுப்பு, விழிப்பு இல்லாமல் சோம்பேறியாக இருப்பான். பெரிய அறிவாளியாக இருந்தாலும் தனக்குத் தெரிந்ததை விளக்க முடியாதவனாக இருப்பான். இத்தகைய ஏறுமாறான அம்சங்களை அகற்றி எல்லாச் சிறப்புக்களையும் வழங்கும் தெய்வமே ஆஞ்சநேயர் (அனுமார்)" என்று காஞ்சிப் பெரியவர் ஆஞ்சநேயர் பெருமையை தமகேயுரிய பாணியில் இம்மலரில் தருகிறார். ஆஞ்சநேயர் வழிபாட்டை நம்மிடையே மேலும் பிரபல்யப்படுத்த இவ்விளக்கங்கள் மிகவும் ஏற்றவை.

இவ்வாறு பல் சுவை அம்சங்களுடன் தோத்திரங்கள், மற்றும் மணிவாக்குகளுடன் இச்சிறு திருப்பணி மலர் ஏற்கனவே கூறியதுபோல் ஒரு சிறு பிரபந்தமாக உள்ளது. சிறப்பான சஞ்சிகைகள் வரிசையில் நிச்சயம் இடம் பிடிக்க வேண்டியது இம்மலர்.

பா. அனந்தகிருஷ்ணன்

## உதவி வைத்தியர் பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீடம் கடந்த ஆண்டு டிசம்பரில் நடத்திய உதவி வைத்தியர் பயிற்சியின் இறுதிப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

சித்தியடைந்தோர் விபரம் வருமாறு:

பி. அப்துல் நஸிர், ஆர். பாலபாஸ்கரன், கே. கமலநாதன், கே. கணேசலிங்கம், எம். நாகலிங்கம், ரி. சிவலிங்கம், எஸ். தவராசா, கே. வேலாயுதபிள்ளை. (கி)

SHOBA

புதிய மெருகுடன்

★ ஹைலண்ட் பாற்சபையின் பட்டர் ★

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் தாராளமாகக் கிடைக்கிறது!

HIGHLAND BUTTER
from National Milk Board

200 கிறும் ரூபா 15/75

உயர்ந்த தரம். நிறைந்த சுவை. குறைந்த விலை.

ஜீவசத்துக்கள் அடங்கிய பட்டர். உங்கள் பணத்திற்கு அதிக பெறுமதி.

இறக்குமதி செய்யப்பட்ட பட்டருக்கு நிகரானது.

வீணை மேலதிகச் செலவு எதற்கு?

பாற்சபை பட்டரை ஒருமுறை பயன்படுத்திப் பாருங்கள்

மற்றும் பாற்சபையின் தயாரிப்பான சுத்தமான நெய்

500 ml. ரூபா 35/50

வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

தொடர்பு கொள்ளவும்:

விநியோகஸ்தர்கள்:-

ஷோபா ஏஜென்சீஸ் லிமிட்.

194, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்

பிரதிநிதிகள் டைனமிக் உணவுப்பிரிவு.

## ● போதைப்பொருள் உற்பத்திக்கு
# மரண தண்டனை!

[கொழும்பு]

பாரதூரமான போதைப்பொருள் உற்பத்தி, கடத்தல் போன்ற குற்றங்களைப் புரிவோருக்குக் கடும் தண்டனை வழங்குவதென்று அரசு முடிவு எடுத்துள்ளது.

இவ்விதமான குற்றம் புரிவோருக்கு மரண தண்டனை அல்லது ஆயுட்காலத் தண்டனை வழங்கவேண்டுமென்ற ஜனாதிபதியின் சிபார்சை அமைச்சரவை நேற்று அங்கீகரித்தது.

அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் நடந்த செய்தி நிருபர்கள் மகாநாட்டில் நேற்றைய அமைச்சரவைப் பேச்சாளரான கல்வி அமைச்சர் திரு ரனில் விக்கிரமசிங்க இத்தகவலை வெளியிட்டார்.

ஜூலைக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட கட்டடங்களை, வீடுகளைத் திருத்தி அமைப்பதற்கான புதிய சட்டமூலத்தைக் கொண்டு வருவதற்கான அங்கீகாரத்தையும் அமைச்சரவை நேற்று வழங்கியது.

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-00 | நாட்டுவளம் (தமிழ்) |
| 6-05 | உலக விளையாட்டுப் பந்தயங்கள் (எ. பி. ஸி. நிகழ்ச்சி) |
| 6-55 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | விவரணச் சித்திரம் |
| 7 45 | நகைச்சுவைச் சித்திரம் (ஆங்கிலம்) |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-35 | சிங்கள நிகழ்ச்சி |
| 9-05 | ஆங்கிலத் திரைப்படம் |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-50 | ஆங்கிலத் திரைப்படத் தொடர்ச்சி |
| 11-05 | உலகச் செய்தித்தலையங்கங்கள் |
| 10-45 | நிகழ்ச்சிகள் முடிவு. |

## 8 பிள்ளைகளின் தந்தை சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு முனைக்காட்டைச் சேர்ந்த 8 பிள்ளைகளின் தந்தையான எஸ். சின்னத்தம்பி [வயது 40] என்பவர் இனம்தெரியாத மூன்று நபர்களினால் அவரது இல்லத்தில் வைத்து துப்பாக்கியால் சுடப்பட்டு மரணமானார்

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியளவில் முனைக்காட்டில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் கூறப்படுவதாவது:

சம்பவதினம் சின்னத்தம்பி தனது வீட்டில் இருந்தபோது யாரோ வெளியில் நின்று இறந்தவரைப் பெயர் சொல்லி அழைத்தனர் என்றும் உடனே அவர் வீட்டிலிருந்து வெளியே சென்றபோது வளவுக்குள்வந்த இனந்தெரியாத மூன்று நபர்களில் ஒருவர் அவரைத் துப்பாக்கியால் சுட்டதாகவும், உடனே அவர் தனது வீட்டுப் படியில் வீழ்ந்து மரணமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுட்டவர்கள் அவ்விடத்தை விட்டு தலைமறைவாகிவிட்டனராம்.

இறந்த சின்னத்தம்பி, அண்மையில் மட்டக்களப்பு பல்கலைக் கல்லூரியில் கொள்ளையடிக்கப்பட்ட இரசாயனப் பொருட்கள் தாந்தாமலையில் பொலிசாரினால் கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மூன்று நபர்களில் ஒருவராவார். இவர் மூன்று நாட்களுக்கு முன்னர்தான் விடுதலை செய்யப்பட்டிருந்தார். இவர் மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு விவசாயியாவார். [சூ]

## "தென்னங்களுக்கு தடையால் பனங்களுக்கு கிராக்கி"
### பனம்பொருள் சபைத்தலைவர் கூறுகிறார்

(புலோலி)

"தேங்காய் விலை உயர்வடைந்துள்ளமையால் தென்னையிலிருந்து கள் இறக்குவது தடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் தென்னிலங்கையில் பனங்கள்ளுக்கு அமோககிராக்கி ஏற்பட்டுள்ளது. சீவல் தொழிலில் ஈடுபடுவதற்கு வசதியாகக் கருவியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கருவி மூலம் எதுவித பாகுபாடுமின்றி எல்லோரும் கள்ளிறக்கும் தொழிலில் ஈடுபடமுடியும்".

இவ்வாறு, யாழ். மாவட்டத்தில் மூன்றாவது போத்தலில் கள்ளடைக்கும் தொழிற்சாலையை நாரந்தனையில் திறந்துவைத்து உரையாற்றிய பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசா குறிப்பிட்டார். ஆறு லட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்ட இப்போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலைத் திறப்பு விழாவுக்கு ஊர்காவற்றுறை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. கே. மத்தியாஸ் தலைமை தாங்கினார். தொடர்ந்து உரையாற்றிய பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் குறிப்பிட்டதாவது:-

"இளைஞர்கள் பனை வள அபிவிருத்தித் தொழிலில் அதிக ஆர்வம்காட்ட வேண்டும். பனைத் தொழிலையும் பனைவள அபிவிருத்தியையும் நோக்கமாகக் கொண்டு தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட 22 கூட்டுறவுச் சங்கங்கள் இங்கு சிறப்பாக இயங்கிவருகின்றன. இச்சங்கங்களில் தொழிலாளர்கள் குறைவாக உள்ள சங்கமாக ஊர்காவற்றுறைச் சங்கம் இருந்தபோதிலும் இச்சங்கம் துரித முன்னேற்றமடைந்துள்ளது. இன்னும் ஆறு மாதங்களுக்குள் இங்கு சிறிய அளவிலான பனஞ்சாராய வடிசாலை ஒன்றும் இயங்கத் தொடங்கும். அத்துடன் ஊர்காவற்றுறை ஜெற்றிக்கு அண்மையில் பதநீர் விற்பனை நிலையமொன்றும் நிறுவப்படவுள்ளது".

பொதுநலவாய நாடுகளின் விசேட ஆலோசகர் திரு. க. சம்பந்தம், யாழ் மாவட்டக் கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை, மக்கள் வங்கி முகாமையாளர் கல்வனை கே. சேயோன், யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. எஸ். நடேசு ஆகியோர் உட்பட இன்னும் பலர் உரையாற்றினர். (கு)

"The British Broadcasting Corporation Micro Computer... Come and See for Yourself"

DIPLOMA IN COMPUTER PROGRAMMING

IN COLLABORATION WITH DATA SERVE

Basic, Cobol ஆகியவற்றுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

BASIC — நான்கு மாதங்கள் (பாடநெறியும், செய்முறைப் பயிற்சியும்)

COBOL — மூன்று மாதங்கள் (பாட நெறி மட்டும்)

உளச்சார்பு பரீட்சை கட்டணம் 10/-

நடைபெறும் திகதி 11-1-84

FULL SCHOLORSHIP TO BEST STUDENTS

குறிப்பு:- இலங்கை, பிரித்தானிய பல்கலைக்கழகங்களில் உபயோகிக்கப்படும் B B.C. Micro-Computer மற்றும் Genie போன்ற இரு தரப்பட்ட Computer களில் மாணவர்களுக்கு சிறந்த பயிற்சி அளிக்கப்படும்.

தொடர்பு:-

COMTECK COMPUTER INSTITUTE,

No: 82, 3-rd Cross Street,

(பிரதான வீதி - மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

Jaffna.

## இடமாற்றங்கள்

[யாழ்ப்பாணம்]

தீவுப்பகுதி புள்ளி விபர ஆய்வாளர் திரு. சீ. இராசரத்தினம் துணுக்காய்க்கும் கிளிநொச்சி புள்ளிவிபர ஆய்வாளர் திரு எம். எவ். டேவிட் முல்லைத்தீவுக்கும் வடமராட்சி புள்ளிவிபர ஆய்வாளர் திரு. கே விக்னேஸ்வரன் கிளிநொச்சிக்கும், தென்மராட்சி புள்ளிவிபர ஆய்வாளர் திரு. ஈக. விசாகப்பெருமாள் பளைக்கும், துணுக்காய் புள்ளிவிபர ஆய்வாளர் திரு. கே. கனகமாணிக்கம் சாவகச்சேரிக்கும், முல்லைத்திவு புள்ளிவிபர ஆய்வாளர் திரு. எஸ். சந்தரமூர்த்தி வடமராட்சிக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் புள்ளிவிபர ஆய்வாளர் செல்வி ஆர். மாருதி தீவுப்பகுதிக்கும், பளை புள்ளிவிபர ஆய்வாளர் திரு. எம். தனபாலசிங்கம் கொழும்பு தலைமைக் காரியாலயத்திற்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

யாழ் புள்ளிவிபரத் திணைக்களத்தில் மிக நீண்டகாலமாகத் தொடர்ந்து கடமையாற்றிவரும் ஒரு ஊழியர் உட்பட நால்வர் இம்முறையும் இடமாற்றம் பெறவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(புலோலி)

## இன்றைய பலன்

**மார்கழி மாதம் 22ம் திகதி வெள்ளிக்கிழமை (6-1-84)**

மேடம்: வாழ்வில் இன்று வெற்றி மலரும் எதிலும் அதிர்ஷ்டம் கிட்டும் புதிய பொருள் கொள்வனவு செய்ய நன்று வெளியிடத் தொடர்புகளும் சிறப்பைத்தரும்.

இடபம்: எப்பக்கம் திரும்பினும் ஆதரவு கிட்டும் பொது மக்கள் மத்தியில் மதிப்பு உயரும் அதில்பிள்ளைகளும் பெரும் பங்கு பெறுவர்.

மிதுனம்: பகை மூட்டம் தோன்றும் மிகையானபோக்கு மனத்துயரத்தை உருவாக்கும் சுறுசுறுப்பு குன்றும் குடும்பத்தில் பூசல்கள் தோன்றும்.

கடகம்: பிரிந்தவர்கள் இணைவர் களஸ்திரவழியால் செல்வாக்கும் இலாபமும் கிட்டும் குடும்பத்தில் குதூகலம் பிறக்கும் மங்களகரமான தினம்.

சிங்கம்: கடன் பிணக்கால் கைகலப்பு ஏற்படலாம் நண்பரின் பாதை தவறாகவேயிருக்கும் மௌனம் அமைதிதரும்,

கன்னி: உடம்பை அலட்டிக் கொள்ளாமலே உயர்வுக்குவழி காண்பீர் மேலிடத்து உறவு உற்சாகத்தை தரும் தாராள சிந்தை மேலோங்கும்.

துலாம்: தொழில் துறையில் புதிய வெற்றி கிடைக்கும் சிலர் வாழ்க்கையில் கடல் கடந்த பிரயாணங்களும் இடம் பெறும் சிறப்பானதினம்.

விருச்சிகம்: வீட்டில்மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும் வாகன இலாபங்களும் கிடைக்கலாம் கல்வி முன்னேற்றமுண்டு.

தனுசு: அவசரம்வேண்டாம் ஆயுத பீடைக்கு இடமுண்டு நில் நிதானி அமைதி உன் அருகில்.

மகரம்: தனதானிய நஷ்டத்துடன் பூமிப்பிணக்கும் தோன்றக்கூடும் கடமையாற்றும் இடத்தில் நிதானம் வேண்டும்

கும்பம்: உழைப்பால் உயர்வடைவீர் வியாபாரத் துறையில் நல்ல முன்னேற்றமுண்டு குடும்பம் மகிழ்ச்சிகரமாக இருக்கும் நல்லதினம்,

மீனம்: உடல்நலம் பாதிப்படைய இடமுண்டு மனப் போராட்டங்கள் இடம்பெறலாம் குடும்பத்திலும் மோதல்கள் விரக்தி மனப்பான்மையை உருவாக்கும் அடக்கம் நன்று.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை
குவேந்திரன்

## வெங்காயப் பயிர்களுக்கு புதிய நோய்!

(புலோலி)

வடமராட்சிப் பகுதியில் வெங்காயப் பயிர்களுக்கு 'வெங்காயக் குமிழ் அழுகல் நோய்' ஏற்பட்டுள்ளமையினால் இப்பகுதியில் வெங்காயப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

அண்மையில் தொடர்ந்து சில நாட்களாகப் பெய்த மழையே வெங்காயப் பயிர்களுக்கு இந்நோய் ஏற்படக் காரணமாக இருந்தது.

யாழ் மாவட்ட விவசாயப் பயிர்ப் பாதுகாப்பு உத்தியோகத்தர் திரு எஸ். நடராசா, புலோலி விவசாயப் போதனாசிரியர் திரு. கே. கிருஷ்ணபிள்ளை, விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர்களான திரு. வ. பரமேஸ்வரன், திரு எம். கணபதிப்பிள்ளை, திரு. எஸ். மார்க்கண்டு, திரு. எஸ் சின்னத்தம்பி ஆகியோரடங்கிய விவசாய உத்தியோகத்தர் குழுவொன்று வெங்காயப் பயிர்ச்செய்கை பண்ணப்படும் பகுதிகளான உடுப்பிட்டி, வல்வெட்டி, புலோலி, கரவெட்டி, கரணவாய்ப் பகுதிகளுக்குச் சென்று பாதிக்கப்பட்ட வெங்காயப் பயிர்களைப் பார்வையிட்டதுடன், விவசாயிகளுக்கு "வெங்காயக் குமிழ் அழுகல் நோயைக்" கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளையும் எடுத்துக் கூறினர்.

## கிராமத்துக்குச் சேவையாற்றியவர்

ஒளி வழங்கி மறைகின்ற கற்பூரத்தைப்போல தன்னலம் கருதாது பொதுநல சேவை செய்து மறைந்தவர்களில் ஒருவர்தான் ஊரெழுக் கிராமத்தைச் சேர்ந்த திரு. அருளம்பலம் காராளசிங்கம்.

ஊரெழுக் கிராமம், நீர்வேலிக் கிராமசபையின் எல்லைக்குட்பட்டிருந்த காலத்திலும், பின்னர் உரும்பராய்-ஊரெழு பட்டினசபையின் எல்லைக்குட்பட்டிருந்த காலத்திலும் அதன் நீண்டகால உறுப்பினராகவும் சில காலம் பட்டினசபையின் உப தலைவராகவும் கடமையாற்றியிருக்கிறார் இவர் கூட்டுறவுத் துறையில் ஆற்றியிருக்கும் சேவைகளையும் சிறப்பாகக்குறிப்பிடலாம். இவர் எந்த ஒரு பொதுக்கருமத்தையும் தலைமை தாங்கிச் சிறப்பாகச் செய்துவந்ததினால் கிராமமக்கள் அனைவரினதும் பாராட்டைப் பெற்றிருக்கிறார்.

-அ. கனகசூரியர்

## 40 குடும்பங்களுக்கு நிதி உதவி

(மன்னார்)

மன்னார்-எள்ளுப்பிட்டி கிராமத்தில் கோழி, ஆடு வளர்ப்புக்கு ஊக்கமளிக்க தெரிவு செய்யப்பட்ட 40 குடும்பங்களுக்கு உலகதரிசன இயக்கத்தினால் நிதி உதவி அளிக்கப்பட்டது. [கு]

## நூலகவியற் கல்வி

(யாழ்ப்பாணம்)

ஜூலைக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களின் நன்மையைக்கருதி, இவ்வாண்டு நூலகவியற் கல்வி வகுப்புகளில் சேர்வதற்கான விண்ணப்ப முடிவுதிகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக இலங்கை நூலகச் சங்கச்செயலாளர் திரு கா. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

## புதிய நிர்வாகிகள்

(மாவிட்டபுரம்)

மயிலிட்டி - வடக்கு பாரதி சனசமூகநிலையத்தின் 1984-ம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள்தெரிவு அண்மையில் நடைபெற்றது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. வே. மாணிக்கள், உப தலைவர் திரு. பொ. கிருபாமூர்த்தி, செயலாளர் த. குணசேகரம், உப செயலாளர் திரு. கா ஆனந்தராசா, பொருளாளர் திரு வ. சின்னராசா, உப பொருளாளர் திரு. இ. கிருஷ்ணவசீகரன்.

ஆறுபேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (சூ)

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
எம்.ஜி.ஆர் - சரோஜாதேவி
**அன்பே வா**

**ராணி** (யாழ். நகர்)
Daily 10-30 a.m. 2-30, 4-30, 7-00 p. m. only
**Warriors**
(adults only)
அடுத்து
எதிரொலி

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
அரங்கு நிறைந்த
மகத்தான 3-வது
மகளிர் வாரம்
சிவகுமார் – ராதா
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
**ஆனந்தராகம்**
(கலர்)
இசை: இளையராஜா

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 4-45, 7-15, 9-30
Dee Wallace - Patrick Macnee
in
**"The Howling"**
Adults only
நீண்ட நாட்களின்பின்
மயிர்கூச்செறியும் மர்ம
திகில் படத்தை கண்டு
களிக்க அரிய சந்தர்ப்பம்

**றீகல்** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-15, மாலை 9-00 மணி
நெஞ்சத்தைக்கிள்ளும்
மோகன்
புதுமுகமாக
பூர்ணிமா ஜெயராம்
தனிமரமாக
ராஜேஸ்
கலகலப்புக்கு
கவுண்டமணி
இன்னும் இத்தனைபேர்
சேர்ந்தும்
**பயணங்கள் முடிவதில்லை**
(ஈஸ்மென் கலர்
பொன்விழா காவியம்

**ராஜா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-00
பல முயற்சிகளின் பின்
இத்திரைவிருந்து திரை
யிடப்படுகிறது இதுவே
கடைசித் தடவையாக
காண்பிக்கப்படுகிறது.
குறிப்பிட்ட தினங்களுக்கு
மட்டும்.
சிவாஜி--நாகேஷ்
சௌகார்— நிர்மலா
பேபி ஸ்ரீதேவி (முதல்
தடவையாக நடித்த)



**பாபு** (புதிய பிரதி)
வெள்ளிவிழாச்சித்திரம்

**லிடோ** [யாழ்நகர்]
தினசரி 3 காட்சிகள்
THE MAN WITH THE DEADLY LENS
(action packed)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி-ஸ்ரீதேவி
பைலட் பிரேம்நாத்

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-00,
கமல்-ஸ்ரீதேவி
சில்க் சுமிதா
**மூன்றும்பிறை**
(வெள்ளிவிழா சித்திரம்)

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30 மட்டும்
மாதர்களே!
உங்கள்
வேண்டுதலுக்காகவே
**ஊரும் உறவும்**
மேலும் நீடிக்கப்பட்டுள்ளது
இறுதி நாள் 8-1-84

**மனோகரா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
M.G.R. - வாணிஸ்ரீ
தேங்காய் சீனிவாசன்
**ஊருக்கு உழைப்பவன்**
(புதிய கொப்பி)


# பாசறை விழாவில் மகாஜனா சாரணர் வெற்றி

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை, மானிப்பாய் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பாடசாலைகளுக்கிடையே காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் சங்கம் நடத்திய பாசறை விழாவில் மகாஜனக்கல்லூரிச் சாரணர்கள் தொடர்ந்து மூன்றாவது ஆண்டும் வெற்றியீட்டிச் சுழல் கேடயத்தைப் பெற்றுக் கொண்டனர்.

இச்சாரணர் விழா தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இளவாலை புனித ஹென்றி கல்லூரி அதிபர் வண பிதா இராஜநாயகம் தலைமையில் நடைபெற்றது.

யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார்.

யாழ். அரச அதிபர் தமதுரையில் "சாரணர் அணிவகுப்பு, மைதானக் காட்சி, நிலையக் காட்சி, பாசறை, குருளைச் சாரணரின் பொருட்காட்சி ஆகியவை சிறந்த முறையில் அமைந்ததாகக் கூறினார். அகதிகள் முகாம்களில் காங்கேசன்துறை மாவட்டச் சாரணர்கள் ஆற்றிய சேவையைப் பாராட்டி இப்படியான இயக்கம் தேசிய அபிவிருத்திக்குப் நற்பிரஜைகளை உருவாக்குவதற்கும் உதவ வேண்டும்" என்று கூறினார்.

சாரணர் மாவட்ட ஆணையாளர் திரு. இ விஸ்வநாதன் நன்றியுரை கூறினார்.

மகாஜனக் கல்லூரி இத்தடவையுடன் தொடர்ந்து மூன்று முறைகள் சகல போட்டிகளிலும் வெற்றியீட்டி முதலாமிடத்தைக் கைப்பற்றியுள்ளது குருளைச் சாரணர்கள் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளனர்.

கல்லூரிச் சிரேஷ்ட சாரணர்களான இ. உதயகுமார் கு. நிமலன் ஏ. ஆர். ஐ. பெர்னாண்டஸ் ஆகியோர் ஜனாதிபதி சின்னம் பெற்றுள்ளனர்.

கல்லூரிச் சாரணர் வளர்ச்சிக்கு அதிபரின் முயற்சி பாராட்டுக்குரியது சாரணர் பொறுப்பாசிரியாராக திரு. செ. தியாகராஜா கடமையாற்றுகிறார். அவருக்கு உதவியாக கல்லூரி பழைய மாணவர்களும், ஜனாதிபதி சாரணர்களான சோ. முருகானந்தன், சி. கணேசலிங்கம், ச சுதர்சன், ச. ஜனார்தனன் இ. ரவீந்திரன் ஆகியோர் கடமையாற்றுகின்றனர்.

குருளைச் சாரணர்களுக்குப் பொறுப்பாசிரியர்களாக திருமதி ரே. இரத்தினவேலும் செல்வி. முத்தையாவும் கடமையாற்றுகின்றனர். (வெ)

## சிரமதானம்

[மாவிட்டபுரம்]

மயிலிட்டி வடக்கு பாரதி சனசமூகநிலையத்தினரால் காங்கேசன்துறைப் பட்டினசபை எல்லைக்குட்பட்ட மயிலிட்டி கட்டுவன் வீதியிலிருந்து கலைமகள் மகாவித்தியாலயத் தியாலயத்திற்கு அருகாமையால் செல்லும் வெள்ள வாய்க்கால் சிரமதானம்மூலம் துப்பரவு செய்யப்பட்டது.

50மேற்பட்ட நிலைய அங்கத்தவர்கள் சிரமதானத்தில் பங்குபற்றினர். இவ்வெள்ள வாய்க்கால் துப்பரவு செய்யப்பட்டதனால் வெள்ளம் கிராமத்தைத்தாக்காது கடலுக்கு ஓடிச்செல்ல இலகுவாக அமைந்துள்ளது.

## வருடாந்த உற்சவம்

[இருப்பிட்டி]

புங்குடுதீவு மத்தி மூத்தநயினார்புலம் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ள இவ்வுற்சவத்தில் 17ம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெற உள்ளது.

## விவாகப் பதிவாளராக நியமனம்

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த இளைப்பாறிய வர்த்தக ஆசிரியர் திரு. ஆ. நாகலிங்கம் பதில் விவாகப் பதிவாளராக வலிகாமம் வடக்குப் பகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறந்த சமூக சேவையாளரான இவர், காங்கேசன்துறை பொலிஸ் வட்டார பொதுமக்கள் நட்புறவுச் சங்க உறுப்பினராகவும், மயிலிட்டி தெற்கு கிராம சேவையாளர் பிரிவின் சமாதான சபை உறுப்பினராகவும் கடமையாற்றுகின்றார்.


**மாணவ, மாணவிகளே**

★ வட இலங்கையின் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை.
★ இலவச வினாவிடைகள், அச்சடித்த விளக்கக் குறிப்புகள்.
★ சிறந்த பெறு பேறுகட்கு உத்தரவாதம்,

**G. C. E. O/L DECEMBER 84**
6-ம், 7-ம், 8 ம், 9-ம் வகுப்புகள்
ஆரம்பம்: 9-1-1984 காலை 9-00
**FINANCIAL ASSOCIATION**
402 1/2, K. K. S. ROAD, JAFFNA.
[சிவன்கோவிலடி]
(10969)

**CITY CENTRAL CLINIC JAFFNA**

Applications are invited for the following posts.
Please apply Before 10 - 1 - 84.
1. MEDICAL OFFICER PART TIME
2. TRAINEE PHARMACIST
3. TRAINEE NURSES

Advt No; 10968
C/o Eelanadu, Jaffna 10968

**உடன் தேவை**
அச்சகத்தில் வேலை செய்து அனுபவமுள்ள
பைண்டர், பிளேட்டின் மெசின்மைன்டர்,
எழுத்துக்கோப்பாளர்கள் தேவை.
சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.
**மேஜர் பிரின்டர்ஸ்**
பெருங்குளம் வீதி, சாவகச்சேரி.
குறிப்பு: உங்களுக்குத் தேவையான தமிழ் VIDEO படப் பிரதிகள் வாடகைக்கு உண்டு.
(10970)

**வெற்றிடங்கள்**
அரியாலை சனசமூக நிலைய அன்னலச்சுமி ஞாபகார்த்த பாலர் பாடசாலை நிர்வாகத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்கள்.
1. பிரதம ஆசிரியை 2. உதவி ஆசிரியை
க. பொ. த. (சாதாரணம்) சித்தியுடன் சிறுவர் பாடசாலை விசேட பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
14-1-84இற்கு முன்னர் முழு விபரங்களுடன்
சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும்.
கல்விக்குழு செயலாளர்,
**அரியாலை சனசமூக நிலையம்,**
புங்கங்குளம், அரியாலை.
(10967)

**G. C. E. (A/L) 84/85 ஆண்டிற்கான**
**விஞ்ஞான வகுப்புக்கள்**
ஆரம்பம்: 12-1-84
பாடங்கள்
தூய கணிதம், பிரயோக கணிதம்,
பௌதிகம், இரசாயனம்.
திறமையான பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
தொடர்பு:
**COMTECK COMPUTER INSTITUTE**
82 3RD CROSS STREET, JAFFNA.
(பிரதான வீதி — மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

**பிறந்ததின வாழ்த்து**



சாவகச்சேரி டச் வீதியைச் சேர்ந்த முகமது அலி மும்தாஜ் தம்பதிகளின் அன்புச் செல்வன் யாசீர் அரபாத் தனது முதலாவது பிறந்த தினத்தை 6-1-84ல் கொண்டாடுகிறார். இவரை அல்லாஹ்வின் கிருபையால் பல்லாண்டு வாழ்க வென வாழ்த்துபவர்கள் உம்மா வாப்பா, அப்பா, உம்மம்மா, வாப்புச்சி, பூட்டிம்மா, பெரியம்மா மார், பெரியப்பா மார், மாமா மார், மாமி மார், சாச்சா மார், காக்கா மார், ராத்தா மார், மச்சான் மார், மச்சிமார், புசாமினு.
(10976)





கிழக்கு லெபனானில் இஸ்ரேலிய ஜெட் போர் விமானங்கள் தொடர்ந்து குண்டுமாரி பொழிந்து வருகின்றன. குறிப்பாக ஷியா முஸ்லிம் தீவிரவாதிகள் குடியிருக்கும் பகுதிகளிலேயே பலத்த குண்டுத் தாக்குதல்கள் நடக்கின்றன!

நேற்று முன்தினம் பெய்ரூட்டில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர். 400 பேர் பலத்த காயமடைந்தனர்.

குண்டுவீச்சில் பெற்றோரை இழந்து தனது சின்னஞ் சிறு தம்பியைக் கையில் ஏந்திநிற்கும் சிறுவனை முதல் படத்திலும், இஸ்ரேலிய விமானங்களை அழிக்கும் ஷியா முஸ்லிம் தீவிரவாதி ஒருவரை மற்றைய படத்திலும் இங்கு காணலாம்.

(செய்தி 3ம் பக்கம்)

# 'இந்து லாட்ஜ்' வேலைகள் ஆரம்பம்

## விளையாட்டரங்கு வாசலும் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கல்யாண மண்டபத்தை 'இந்து லாட்ஜா'க மாற்றும் திட்டத்தின் வேலைகளை யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் நேற்றுக் காலை ஆரம்பித்துவைத்தார்.

கடந்த மாதம் 28-ம் திகதி நடைபெற்ற யாழ்ப்பாணமாநகரசபையின் 84ம் ஆண்டுவரவு செலவுத்திட்டக் கூட்டத்தில் கல்யாணமண்டபத்தை 'இந்து லாட்ஜாக' மாற்றுவது குறித்த யோசனையை ஆணையாளர் வெளியிட்டு, இத்திட்டத்துக்காக மூன்றரை லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

### விளையாட்டரங்கு வாசல் மாற்றம்

இதே பட்ஜட் கூட்டத்தில் துரையப்பா விளையாட்டரங்கின் வாசல்பற்றி ஆணையாளர் தெரிவித்த திட்டத்தின் ஒரு பகுதியும் நேற்று நிறைவேற்றப்பட்டது.

விளையாட்டரங்கின் வாசல் வடக்கு நோக்கி, கே. கே. எஸ். வீதி யாழ். நூல்நிலையப் பின்பக்கமாக நேற்று திறந்து வைக்கப்பட்டது.

## மினிபஸ் – பஸ் விபத்து பலர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மினிபஸ் - இ. போ. ச. பஸ் விபத்தில் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை நாவற்குளிச் சந்தியில் இவ்விபத்து இடம்பெற்றது.

படுகாயமடைந்தவர்கள் உடனடியாக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

சாவகச்சேரிப் பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர்.

## பல்கலைக்கழக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டிக்காட்டி பல்கலைக் கழகங்களை மூடியதன் காரணத்தால் மாணவர்கள் பலர் தப்பிவிட்டனர். பல்கலைக் கழகங்கள் இவ்விதம் மூடப்பட்டிருக்காவிட்டால் மாணவர்களும் அதிகமாக கொலைசெய்யப்பட்டிருக்கலாம். திட்டமிடப்பட்டு பயமுறுத்தல் கடிதங்கள் மாணவர்களுக்குக் கிடைத்துள்ளன.

"தமிழ் மாணவர்களைக் காப்பாற்ற முடியாத அதிகாரிகள் இன்றைய நிலைமையை உணர்ந்து அவர்களில் முடியுமானவர்களை யாழ்ப்பாணம் மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களில் அனுமதிக்க வேண்டும் மிகுதியானவர்களுக்கு வேறு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

"தமிழக அரசும், தமிழ் நாட்டிலுள்ள சகல பொறியியற் கல்லூரிகளும் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் பொறியியற்பீட மொன்றை அமைக்க முடிந்த உதவிகளை வழங்க தயாராக இருக்கின்றன. இதனைச் சரியாகப்பயன்படுத்தி, யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் பொறியியற் பீடத்தை ஆரம்பிக்க யாழ்ப்பாண பல்கலைக்கழகமும், பல்கலைக்கழக மானியக்குழுவும் விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்,

## 9ம் திகதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மானது. இதில் 25 இடம் பெயர்ந்த மாணவர்கள் 3நாட்களுக்கு தொடர்ந்து இருக்கின்றனர்.

யாழ். பல்கலைக்கழக முதலாம் வருட விஞ்ஞான மாணவர்கள் ஆதரவு தெரிவித்து நேற்று உண்ணாவிரதம் இருந்தனர். இன்றுகாலை 2-ம் கட்டம் முடிவடைகிறது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் செவ்வாய்க்கிழமை முழுநாளும் ஆதரவாக உண்ணாவிரதம் இருந்த போதிலும், 2-ம் வருட மருத்துவபீட மாணவர்கள் அன்று தொடக்கம் தங்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்து கட்டம் கட்டமாக உண்ணாவிரதம் இருந்து வருவதாக மாணவர் தலைவர் தெரிவித்தார்.

இன்று வெள்ளிக்கிழமை யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களும், இடம்பெயர்ந்த பல்கலைக்கழகமாணவர்களில் அதிகமானோரும் ஆதரவாக உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ளவுள்ளனர். இவர்களுடன் யாழ். பல்கலைக்கழக 3-ம், 4-ம் வருட வர்த்தகபீட மாணவர்களும் ஏற்கனவே அறிவித்தபடி உண்ணாவிரதம் இருப்பார்கள்.

உண்ணாவிரதம் இருப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைத் தொடர்ந்து கூடாரங்களும், கொட்டகைகளும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன.

நேற்றுமுன்தினம் தொடக்கம் பெய்துகொண்டிருந்த மழையால் உண்ணாவிரதம் இருக்கும் மாணவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தனர்.

உண்ணாவிரதம் நடைபெறும் உள்பக்கத்திலும் வெளியிலும் கொட்டும் மழையில் அதிகமான மாணவர்களும், பொது மக்களும் குடைகளைப் பிடித்துக்கொண்டு உண்ணாவிரமிருந்தவர்களுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

நேற்று சமநீதி மாணவர் அணி உண்ணாவிரதமிருக்கும் மாணவர்களைச் சந்தித்து, தங்கள் ஆதரவைத் தெரிவித்துக் கொண்டனர். தொடர்ந்து பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் தருவதாக உறுதி அளித்து சென்றதாக இடம்பெயர்ந்த மாணவர் ஒன்றியத் தலைவர் தெரிவித்தார்.

சமநீதி மாணவர் அணி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆதரித்து துண்டுப்பிரசுரம் ஒன்றையும் வெளியிட்டது. (மா)

# உத்தரவு மீறிச் சென்ற கார் மீது பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம்!

(மாவிட்டபுரம்)

பொலிஸாரின் உத்தரவை மீறிச்சென்ற காரொன்று பொலிசாரினால் துப்பாக்கியால் சுடப்பட்டு நிறுத்தப்பட்டது.

சித்தன்கேணிச் சந்தியில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவதினம்இரவுகாங்கேசன்துறைப் பொலிசைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் தர்மவர்த்தன தலைமையிலான பொலிஸ் கோஷ்டி சித்தன்கேணிச் சந்தியில் ரோந்து சேவையில் ஈடுபட்ட சமயம் அவ்வழியால் வந்த கார் ஒன்றினை சந்தேகம் கொண்டு மறித்தபோது கார் நிற்காது செல்லவே பொலிசார் துப்பாக்கியால் சுட்டு காரை நிறுத்தி, காரையும், அதில் பயணம் செய்த 4பேரையும் காங்கேசன்துறை பொலிசில் ஒப்படைத்துள்ளனர்.

இந்த 4பேரும் சுழிபுரத்தை சேர்ந்தவர்கள் என பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. (சு)

## மற்றுமொரு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லிங்கம் அதனை ஏற்றுக்கொண்டார்.

### புதுடில்லி பேச்சுக்கள்

"புதுடில்லியில் திரு ஜி. பார்த்தசாரதிக்கும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்குமிடையிலும், ஜனாதிபதிக்கும் திருமதி இந்திரா காந்திக்குமிடையிலும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் திரு. பார்த்தசாரதிக்கும் இடையிலும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கையின் அடிப்படையில் புதிய நிகழ்ச்சித் திட்டம் சகல அரசியல் கட்சிகளுக்கும் மீண்டும் அனுப்பப்படவிருக்கிறது. இதனை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டிருப்பதாக திரு. பார்த்தசாரதி எமக்கு உறுதியளித்துள்ளார்' என்று திரு. அமிர்தலிங்கம் விளக்கம் அளித்தார்.

### அரசியல்குழு கூடுகிறது

"கூட்டணியின் அரசியல் குழு சனிக்கிழமை கூடவிருக்கிறது. குழுவின் அங்கத்தவர்கள் சிலர் சென்னையிலிருந்து சனிக்கிழமை காலை கொழும்பு வந்துசேருவார்கள். அதே நேரத்தில் இலங்கையிலும் இந்தியாவிலும் இருக்கும்கூட்டணி மூன்று எம். பி.க்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களை கொழும்பில் சந்தித்து ஆலோசனை நடத்தவுள்ளோம். எம். பி. பதவியை இழக்காத இரு எம். பி.க்களும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள். இதற்கான அழைப்பு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது. இக் கூட்டம் எட்டாம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும்" என்றும் திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

### கட்சித்தலைவர்கள் சந்திப்பு

கூட்டணித் தலைவர்கள் இன்று கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சித்தலைவர்களைச்சந்திப்பார்கள் இரண்டாவது தடவையாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரை இன்று சந்திப்பார்கள் கிழக்குமாகாண முஸ்லிம் எம். பி.க்களைச் சந்திக்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### குமாரை சந்தித்தனர்

தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு குமார் பொன்னம்பலத்தை கூட்டணித் தலைவர்கள் நேற்றிரவு சந்தித்து ஒன்றரை மணிநேரம் வரை பேச்சுநடத்தினார்கள்.

இப்பேச்சுக்களில், தமிழ்க் கட்சிகள் ஒரே குரலில் தங்களது கோரிக்கைகளை வென்றெடுக்க பாடுபடவேண்டும் என்று பொதுவாக கருத்து தெரிவிக்கப்பட்டது.

# ரூ. 2,000 கொள்ளை

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க மாவிட்டபுரம் கிளையில் இனம் தெரியாத இருவரினால் துப்பாக்கி முனையில் 1,965 ரூபா கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை இக்கிளையின்மனேஜர்கடையை ஒற்றைக் கதவில் திறந்து வைத்து கணக்குப் பார்த்துக் கொண்டிருந்த போது சைக்கிளில் வந்த இரு இனந் தெரியாத நபர்கள் துப்பாக்கியைக் காட்டி இப்பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இதுதொடர்பாக காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. பொலிசார் விசாரணைசெய்து வருகின்றனர். [சு]

## 10வது ஆண்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சொற்பொழிவாற்றுவர்.

அன்றுமாலை கார்மேல்மாதா மண்டபத்தில் பூசையும், கூட்டுப்பலிப்பூசையும், அஞ்சலி உரையும் நடைபெறவுள்ளன.

இதற்கானஏற்பாடுகளை யாழ். மாநகரசபை முன்னால் உபமுதல்வரும், தமிழர்விடுதலைக் கூட்டணிப் பிரமுகருமான திரு. எம். எம். அலோசியஸ் மேற்கொண்டுள்ளார்.

1974 ஜனவரி 10ம் திகதி நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று 9பேர் பலியானது தெரிந்ததே. (மா)

## இணைப்பு இயந்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இளைஞர் கோஷ்டி சென்ற வான் யாழ்ப்பாணத்திலுள்ள வீடியோ நிலையமொன்றின் உரிமையாளரான மகாலிங்கம் என்பவருக்குச் சொந்தமானது என்று பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

கடத்திய வானில் சென்ற இளைஞர் கோஷ்டி ஊர்காவற்றுறை துறைமுகத்தில்வைத்து அங்கிருந்தவர்களை துப்பாக்கி முனையில் பயமுறுத்தி 'அவுட் போட்' மோட்டார் இயந்திரத்தைக் கொள்ளை அடித்து தலைமறைவாகிவிட்டதாம்.

கடத்தப்பட்ட வான் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு அண்மையில் நேற்றுக்காலை அனாதரவான நிலையில் இருக்க பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறைபொலிசார் வானை பொலிஸ் நிலையத்தில் வைத்துள்ளனர். (மா)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம், [illegible] வீதி, [illegible]-ம் இலக்க அச்சகத்தில் 1984-ம் ஆண்டு ஜனவரி மாதம் 6-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 190236/81. Eelanadu- P. O. Box. 49, Telephone: 22389 — 24126.